பக்கங்கள்: 13 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 09 வெள்ளிக்கிழமை 24.12.2021 கதிர் 49

### இது ரகசியம் அல்ல!

இலங்கை அரசின் 'கடன் வாங்கிக் கலியாணம்' என்ற பொருளாதாரக் கோட்பாடு முறைமை வெற்றி நடைபோடுகின்றது. கலியாணசந்தோம் தொடரும். ஆனால் கடன் தவணைக் கட்டணம் கழுத்தை இறுக்கும்போது தான் வேதனை புரியும்.

பக்கம்02

# வவுனியா வடக்கு பிரதேச சபை போல் வடக்கு மாகாண சபையும் மாறக்கூடும்

## தேர்தல் உடன் நடத்தப்பட வேண்டும் என்று சி.வீ.கே. வலியுறுத்து

(இ.கலையமுதன்)

வவுனியா வடக்கு பிரதேச சபை போல் வடக்கு மாகாண சபையும் கைமாறலாம் என்று வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவ ஞானம் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

என்னுடைய அனுபவத்தைப் பொறுத்தவரை மாகாண சபை கூடிப் பேசுவதற்கான ஒரு கட்டமைப்பு. எனவே, மாகாண சபைத் தேர்தல் உடனடியாக நடத்தப்பட வேண்டும்.

2



# திருப்பதியில் மஹிந்தர் தீவிர பாதுகாப்பு ஏற்பாடு



(ந.லோகதயாளன்)

இலங்கைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ திருப்பதி சென்றமையையொட்டி பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

திருப்பதி ஏழுமலையானை சுவாமி தரிசனம் செய்ய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது குடும்பத்தாருடன் இரண்டு நாள் சுற்றுப் பயணமாக

12

### கிளிநொச்சியில் வெடித்தது காஸ் அடுப்பு

கிளிநொச்சி, ஜெயந்தி நகர் பகுதியில் நேற்று எரிவாயு அடுப்பு வெடிப்புச் சம்பவம்

12

### யாழில் மற்றுமொரு மலேரியா நோயாளி

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணத்தில் மலேரியா தொற்றுக்குள்ளான மற்றொரு நபர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளார். யாழ். போதனா

12

### அச்சுவேலி பொலிஸ் நிலையத்துக்கு யாழ். மாவட்ட டி.ஐ.ஜி. திடீர் பயணம்



(எஸ்.நிதர்ஷன்)

அச்சுவேலி பொலிஸ் நிலையத்துக்கு யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நேற்று திடீர்

12

# வெளிநாட்டு மாப்பிள்ளை, பெண் இங்கு திருமணம் எழுத கெடுபிடி!

## வருகிறது புதிய கட்டுப்பாடு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிச.24

வெளிநாட்டு பிரஜைகள் இலங்கை பிரஜைகளைத் திருமணம் செய்யும் நடவடிக்கைகளில் இறுக்கமான கட்டுப்பாடுகளை அரசு கொண்டு வந்திருக்கின்றது.

12

# நாட்டில் பஞ்சம் ஏற்படாது!

## விவசாயத்துறை அமைச்சர் உறுதி

நாட்டில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படாது என்பதை விவசாயத்துறை அமைச்சர் என்ற வகையில் பொறுப்புடன் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

- இவ்வாறு அமைச்சர் மஹிந்தானந்த

2



# வெள்ளி தோறும் இனிமேல் சத்தியமூர்த்தியின் கட்டுரைகள்



மூத்த பத்திரிகையாளரும் அரசியல் சிந்தனைக் கூட சிற்பியுமான என். சத்தியமூர்த்தி தமிழகத்தில் இருந்து வாரம்தோறும் 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு 'அக்கரை/இறை அலசல்' என்ற தொடரில் அரசியல் திறனாய்வுக் கட்டுரைகளை வரைய இசைவு தெரிவித்திருக்கின்றார். அத் தொடரில் முதலாவது கட்டுரை இன்று 10ஆம் பக்கத்தில் பிரசுரமாகின்றது.

அவர் இந்தியாவில் பெரிதும் மதிக்கப்படும் அறி வார்ந்த பத்திரிகையாளர். புகழ் பெற்ற பல

12

# வாக்குறுதியை நிறைவேற்றாவிட்டால் நாடெங்கும் மீண்டும் பெரும் போராட்டம்

## அரசுக்கு ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை

அதிபர் - ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினை தொடர்பாக அரசு வழங்கிய வாக்குறுதிகளை உரிய முறையில் நிறைவேற்றாவிட்டால் நாடளாவிய ரீதியில் பாரிய தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடுவோம்.

12



தென்னாடு

சிவ சிவ
திருச்சிற்றம்பலம்

மார்கழிப் பெருவிழா - 2021

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடமும், சைவ மாணவர் சபையும் இணைந்து நடாத்தும் மார்கழிப் பெருவிழா இம்முறை சிலை நல்லோரை மார்கழித் திங்கள் 10ம் நாள் சனிக்கிழமை மற்றும் 11ம் நாள் ஞாயிற்றுக்கிழமை (டிசம்பர் 25 மற்றும் 26) திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடாத்த திருவருள் கைகூடியுள்ளது.

காலம் - மார்கழித் திங்கள் 10ம் நாள் 11ம் நாள் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை (டிசெம்பர் 25 மற்றும் 26)
இடம் - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி - சபாலிங்கம் அரங்கம்

தீநுண்மி பெருந்தொற்றுப் பரவல் ஒழுங்குகளால் குறிப்பிட்ட இருக்கைகள் மட்டுமே உள்ளமையால் பங்குபற்ற விரும்பும் அடியவர்கள் தென்னாடு மடத்தில் முன்பதிவு செய்து கொள்ளுங்கள். முன்பதிவு செய்தவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். 021 221 2739 075 653 3111

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது ..............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தவகையில் இப்போது ஒரு சந்தோஷ செய்தி. சீனாவிடம் முன்னர் உரையாட ஆரம்பித்திருந்த ஒரு கடன் தொகையில் ஒரு பகுதி - 1.3 பில்லியன் அமெரிக்க டொலர் (நூற்றி முப்பது கோடி அமெரிக்க டொலர், அதாவது சுமார் 30 ஆயிரம் கோடி ரூபா) - இந்த வாரத்தில் இலங்கைக் குக் கிடைக்கின்றது என்பதை நம்பகர மாக உறுதிப்படுத்த முடிந்தது.

மத்திய வங்கி ஆளுநர் அஜீத் நிவாட் கப்ராலினால் நேற்று முன்தினம் நடத்தப் படவிருந்ததாகக் கூறப்பட்ட செய்தியாளர் மாநாடு ஒன்று திடுதிப்பென ரத்துச் செய்யப் பட்டமை குறித்து தென்னிலங்கையில் பரபரப்பாகப் பேசப்படுகின்றது.

இந்தக் கடன் தொகை அந்நிய செலா வணி சேமிப்பாகக் கிடைப்பது குறித்து அறிவிக்கவே அந்தச் செய்தியாளர் மாநாடு கூட்டப்படவிருந்தது என்றும் -

எனினும், அந்நிய செலாவணி சேமிப் புப் பற்றிய முழு விவரங்களையும் பகிரங் கப்படுத்துவதில்லை என்ற தீர்மானத்தின் அடிப்படையில் அந்தச் செய்தியாளர் மாநாடு பின்னர் ரத்துச் செய்யப்பட்டது என்றும் -

விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

அந்திய செலாவணிக் கையிருப்பு நூற் றிமுப்பது கோடி டொலரினால் - 1.3 பில்லி யன் டொலரினால் - அதிகரிக்கின்றமை யால், மீண்டும் டாம்பீக ஆரவாரங்கள் ஆரம்பமாகும். பால்மா சந்தைக்கு வரும். எரிவாயு சிலிண்டர்களும் சாதாரணமா கக் கிட்டும். பொருள்களின் தட்டுப்பாடு கொஞ்சம் நீங்கும். ஆனால் எல்லாம் ஓரிரு வாரங்களுக்குத்தான். பிறகு வேதா ளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிவிடும்.

ஜனவரி மூன்றாம் வாரத்தில் வெளிநாட் டுக் கடன்கள், பிணை முறிகளுக்கான தவணைக் கட்டணம் அல்லது கொடுப்ப னவாக பெரும் தொகை செலுத்தப்பட்ட வேண்டியிருக்கின்றது. அவை கழுத்தை இறுக்க, மீண்டும் பழைய குருடி கதவைத் திறவடி என்ற கதைதான்.

எது, எப்படி என்றாலும், இப்போதைக்கு அரசு மூச்சு விட்டு, ஆசுவாசப்படுத்த ஓர் இடைவெளி கிடைத்திருக்கின்றது என்று மகிழ வேண்டியதுதான்.

********

சில வாரங்களுக்கு முன்னர் என் இப் பத்தியில் ஒரு விடயத்தை சாடை மாடை யாகக் குறிப்பிட்டிருந்தேன்.

புதுடில்லி சென்றிருந்த மலையகத் தலைவர் ஒருவரை, இலங்கைத் தமிழரின் தேசிய இனப்பிரச்சினையில் வடக்கு, கிழக்குத் தமிழர் தலைமைகளுடன் சேர்ந்து இயங்குமாறு அங்கு அன்புடன் வழிப்படுத்தல் வழங்கப்பட்டது என்ற சாரப் பட என்னுடைய அந்தக் குறிப்பு அமைந்தி ருந்தமை வாசகர்களில் நினைவில் இருக் கலாம்.

அந்தத் தலைவர் அது குறித்து சுமந்திர னுடன் பேசியிருந்தார். வடக்கு கிழக்குத் தமிழர் பிரச்சினையில் சேர்ந்து ஒன்றுபட்டு செயற்படத் தாம் தயார் என்றும் கோடி காட்டியிருந்தார். அவர் வேறு யாருமல்லர், ஜீவன் தொண்டமான்தான். அப்போது அவர் பெயரை நான் குறிப்பிடவில்லை.

“தமிழர் கட்சிகளுடன் சங்கமிக்க இ. தொ.காவும் முழு இணக்கம், அழைப்பு வரவில்லை என்று ஜீவன் தொண்டமான் கவலை” என்று இப்போது செய்தி வெளி வந்துள்ளது.

ஜீவன் தொண்டமானின் கவலை நியா யமானது. தாமும் சேர்ந்து பணியாற்றத் தயார் என்று தெளிவாகவும், உறுதியாகவும் தாம் தமிழர் தரப்பில் சுமந்திரனுக்கு தெரி யப்படுத்திய பின்னரும் தம்மை ஓரங்கட்டி விட்டு இந்த முயற்சி எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் பொருமுவதற்கு நியாயம் உண்டு. அது மறுக்கப்பட முடியாதது.

மலையகக் கட்சிகள், தரப்புகளிடையே போட்டி, பூசல், பொறாமை உண்டு. அது, இந்த விடயத்தில் விளையாடியதா என்றால், அதுவும் இல்லை.

கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு வெள்ளவத்தை குளோபல் டவர் அரங்கில் தமிழ்ப் பேசும் அரசியல் தரப்புகளின் தலைவர்கள் பங்குபற்றிய கூட்டத்துக்கு முன்னரே அந்தக் கூட்டத்தில் ஜீவன் தொண்டமானையும் அரவணைத்துக் கொள்வோம் என்ற ஆலோசனை மனோ கணேசனின் கட்சிப் பிரமுகர் சாவ்டரினா லேயே வலியுறுத்தப்பட்டதாக நான் அறிந் தேன்.

ஜீவனை இணைத்துக் கொள்வது கட்டாயம் என்று சுமந்திரனுடன் சாவ்டர் பேசியிருக்கின்றார்.

தமிழர் தரப்புகளில் ஜீவன் தொண்டமா னுடன் அதிக தொடர்பாடலை வைத்திருப் பவர் சுமந்திரன்தான். ஜீவன் தொண்டமா னின் மரியாதைக்குரிய தலைவராகவும் சுமந்திரனே உள்ளார். அதனால் சுமந்திரன் மூலம் ஜீவன் தொண்டமானை எட்டுவ தற்கு நேரத்துடனேயே முயற்சிகள் எடுக்கப் பட்டன.

ஆனால் ஒரே ஒரு சிக்கல். கடந்த செவ்வாய்க்கிழமை கூட்டம் வரை, அந்தச் சந்திப்புகள், கலந்தாய்வுகளுக்கு சுமந்தி ரனே அழைக்கப்படவில்லை. சம்பந்தன் ஐயா தனது உதவியாளராகத்தான் சுமந் திரனை அங்கு கூட்டிச் செல்ல வேண்டியி ருந்தது. தான் போக முடியாத நிலையில் சுமந்திரன் எப்படி ஜீவன் தொண்டமானுக்கு அழைப்பு வைக்க முடியும்? ‘மூஞ்சூறு தான் போக வழியைக் காணோமாம், அதுக்குள்ள விளக்குமாற்றையும் தூக்கிக் கொண்டு நிண்டதாம்’ என்ற மாதிரியான கதையாகி அல்லவா இது இருக்கும்....!

இப்போது நிலைமை மாறிவிட்டது. தமிழ்ப் பேசும் தரப்புகளின் கட்சித் தலைவர் களின் கூட்டத் தொடரில் சுமந்திரனின் பங்களிப்புக் காத்திரமானதாக ஏற்று அங்கீ கரிக்கப்பட்டுள்ளது. அதனால் இனிமேல் நிச்சயமாக இந்த அணி சேர்க்கைக்குள் ஜீவன் தொண்டமான் இடம்பெறுவார். அவரும் பொது ஆவணத்தில் கையொப்பமி டுவார் என உறுதியாகக் கூறலாம்.

இவ்விவகாரத்தில் பெரும்பாலும் அனைத்து விடயங்களுக்கும் கதை, திரைக்கதை, வசனம், டைரக்ஷன் என அனைத்தும் புதுடில்லியில் இருந்தே வருகின்றமையால் ஜீவன் தொண்ட மானை விட்டுவிட்டு இந்த விவகாரம் முன்நகராது என அடித்துக் கூறலாம்.

********

“ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை வலுப்படுத்துவதற்கான வேலைத் திட் டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கமைய ஜே.வி.பி. போன்ற தூய்மை யான கட்சியுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இணைந்து பயணிப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன.” - என ஜே.வி.பிக்கு ‘ஐஸ்’ வைப்பது போன்ற பகிரங்க அறிவிப்பு ஒன்றை சு.க. செயலாளரான இராஜங்க அமைச்சர் தயாசிறி ஜெயசேகரா நேற்று முன்தினம் விடுத்தார்.

ஆனால் அதற்கு ஜே.வி.பி. உடனடியாக பதிலடி கொடுத்து விட்டது. அதன் பிரமுகர் விஜித ஹேரத் நேற்று பத்திரிகையாளர் மாநாட்டை கூட்டி எந்தச் சந்தர்ப்பத்திலும் சு.கவுடன் அணி சேர மாட்டோம் என்று அறிவித்து விட்டார்.

சு.கவினரின் கூட்டு முயற்சி முளையி லேயே கருகி விட்டது.

********

அமுல்பேபி அலப்பறை விவகாரம் இன்றும் எழுத முடியவில்லை. ஏற்கனவே குறிப்பிட்டவை நீண்டு விட்டமையால், அது குறித்து முடியுமானால் நாளை பார்ப்போம் நண்பர்களே!

**- மின்னல் -**

## வவுனியா வடக்கு பிரதேச ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா வடக்கு பிரதேச சபை போல் வடக்கு மாகாண சபையும் மாறலாம். புதிய அரசமைப்பில் சில சமயங்களில் மாகாண சபையை இல்லாமல் செய்து முழுமையான ஒற்றையாட்சி யாப்பு உரு வாகுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படு கின்றன.

மாகாண சபை முறை தான் தீர்வென நாங்கள் கூறவில்லை. அது ஓர் அடிப்படை. ஆனால், ஒரு சிலர் மாகாண சபையை ஆரம்பப் புள்ளியாகவே ஏற்றுக்கொள்ள மாட்டோம் எனக் கூறுகின்றார்கள். தற்போ தைய நிலைமையில் நாம் பெறவேண்டிய வற்றை பேசுவதற்கான ஒரு தளம் தேவை. அதற்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தப் பட வேண்டும்.

யாழ். குடாநாட்டில் சீனா கால் பதிப்பது தனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான நிலை என்பது இந்தியாவுக்குத் தெரியும். அதைக் கையாள வேண்டியது இந்தியத் தரப்பு. எங்களைப் பொறுத்தவரை இந்த விடயத்தைத் தீர்மானிக்கும் பொறுப்பில் நாங்கள் இல்லை. சீனாவின் செயற்பாட்டில் எமக்கு உடன்பாடில்லை என்பதை நாங்கள் தெளிவாகச் சொல்கின்றோம். அதற்கு மேலாக இது இரு நாடுகளுடன் சம்பந்தப் பட்ட விடயம் - என்றார்.

## திருப்பதியில் மஹிந்தர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று அங்கு சென்றுள்ளார்.

இதற்காக அவர் தங்கும் விடுதி, கோயில் வளாகம், அவர் செல்லும் பகுதிகள், மலைப் பாதை போன்ற பகுதிகளில் தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், அவர் தங்கும் விடுதி அருகில் இருக்கும் இடங்களிலும் பொலிஸார் கண் காணிப்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின் றனர். நேற்று மதியம் சென்ற அவர் இன்று காலை சுவாமி தரிசனம் செய்கிறார். இன்று மாலை வரை திருப்பதியில் தங்கும் அவர் 5 மணியளவில் இலங்கை திரும்பவுள்ளார்.

## நாட்டில் பஞ்சம் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அளுத்கமகே தெரிவித்தார். இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் நேற்று மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படு மென இரசாயன உர நிறுவனங்களின் பிரதிநிதிகளே அறிவிப்புகளை விடுத்து வருகின்றனர். 25 மாவட்டங்களில் உள்ள விவசாய அதிகாரிகளுடன் நான் பேச்சு நடத்தினேன். உற்பத்தி நடவடிக்கை தொடர் பில் மீளாய்வும் செய்தேன்.

உற்பத்தியில் ஓரளவு வீழ்ச்சி ஏற்படும் என்ற போதிலும் உணவுத் தட்டுப்பாடு ஏற்படாது. உரத்தை வழங்குவதற்கு நடவ டிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது - என் றார்.







# கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கு 10 லட்சம் ரூபா நஷ்டஈட்டுத் தொகை

## முல்லையில் டக்ளஸ் வழங்கி வைத்தார்

சமுர்த்தி திட்டங்களை உச்சபட்சம் பயன்படுத்தி நீர்வேளாண்மையில் ஈடுபடுவதன் மூலம் கடற்றொழில் சார் மக்களுக்கு நிலையான பொருளாதாரத்தை ஏற்படுத்த வேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் நேற்று(வியாழக்கிழமை) நடைபெற்ற கலந்துரையாடலின்போதே கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேற்படி கலந்துரையாடலின் போது -

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட கரைவலை தொழிலில் ஈடுகின்றவர்களின் சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடிய கடற்றொழில் அமைச்சர், கரைவலை தொழிலில் ஈடுபடுகின்றவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைக் கேட்டறிந்ததுடன், அவை தொடர்பாக மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

அதனைத் தொடர்ந்து, நந்திக்கடலில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த போது, கடந்த 2020 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 03 ஆம் திகதி உயிரிழந்த ஜெ. செலஸ்ரன் என்பவரின் மனைவி (5 லட்சம் ரூபா) மற்றும் 2 பிள்ளைகளுக்கான (தலா 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா) நஷ்டஈட்டு தொகையாக கடற்றொழில் அமைச்சால் ஒதுக்கப்படட சுமார் 10 லட்சம் ரூபா பெறுமதியான காசோலைகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கி வைத்தார்.

அதேபோன்று, நாடளாவிய ரீதியில் இரண்டு லட்சம் சமுர்த்தி பயனாளர்களின் வாழ்வாதாரத்தை வலுவூட்டும் திட்டத்துக்கு அமைய முல்லைத்தீவு மாவட்டத்தில் கொடுவா மீன் வளர்ப்பில் ஈடுபடுவதற்குத் தெரிவு செய்யப்பட்ட பயனாளர்களுக்கு தலா 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், முதற்கட்ட காசோலைகளும் வழங்கப்பட்டுள்ளன.

இதன்போது கருத்து தெரிவித்த கடற்றொழில் அமைச்சர் -

நலிவுற்ற மக்களின் வாழ்கைத் தரத்தை முன்னேற்றுவதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற சமுர்த்தி திட்டங்கள், பாராபட்சமின்றி நாட்டின் அனைத்துப் பாகங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்றன.

இதன் ஊடாக சுமார் 50 லட்சம் வரையிலான கடன் வசதிகள் உட்பட பல்வேறு நன்மைகளை சமுர்த்திப் பயனாளர்கள் பெற்றுக்கொள்ள முடியும். அதேபோன்று



கிராமிய அபிவிருத்தி வங்கியின் ஊடாக சுமார் 250 லட்சம் வரையிலான கடனைப் பெற்றுக் கொள்ள முடியும்.

எனவே, இந்த வாய்ப்புக்களை சரியாகப் பயன்படுத்தி, பருவ கால மீன் வளர்ப்பு, நன்னீர் மீன் வளர்ப்பு, கொடுவா மீன் வளர்ப்பு மற்றும் இறால், நண்டு, கடலட்டை ஆகியவற்றுக்கான பண்ணைகளை அமைத்தல் போன்ற நீர்வேளாண்மையில் முடிந்தளவு ஈடுபடுவதன் மூலம் நிலைபேறான பொருளாதாரக் கட்டமைப்பை எமது மக்களுக்கு ஏற்படுத்த வேண்டும். இதன்மூலம் நாட்டுக்கான அந்நியச் செலாவணியையும் பெற்றுக் கொள்ள முடியும்.

இதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் பூரணமான ஒத்துழைப்பை வழங்க வேண்டும். - எனக் குறிப்பிட்டார்.

## புதிய உற்பத்தி விதிமுறைகளுக்கு எதிராக தோட்டத் தொழிலாளர்கள் முறைப்பாடு!

### நிர்வாகத்துக்கு செந்தில் தொண்டமான் எச்சரிக்கை



ஹப்புத்தலை தோட்டத் தொழிலாளர்கள் இ.தொ.காவின் உப தலைவரும், பெருந்தோட்ட பிராந்தியங்களுக்கான பிரதமரின் இணைப்பு செயலாளருமான செந்தில் தொண்டமானை சந்திப்பதற்கு நேரம் கோரியதோடு, தொழிலாளர்களின் ஒப்புதல் இன்றி நிர்வாகத்தால் அமுல்படுத்தப்பட்டுள்ள புதிய உற்பத்தி விதிமுறைகளுக்கு எதிராக முறைப்பாடு செய்துள்ளனர்.

வழக்கமான நடைமுறையை விட அதிக சுமை தொழிலாளர்கள் மீது திணிக்கப்பட்டுள்ளதாகவும் புதிய உற்பத்தி திறனுக்கான அளவு என்பது ஒரு சாதாரண தொழிலாளியின் வேலைத்திறனையும் விட அதிகமாக உள்ளதாகவும் தெரிவித்தனர்.

தேயிலைத் தோட்டத்தின் தற்போதைய சூழ்நிலை அடிப்படையில் வழமைப் போல் வழங்கப்படும் கொளுந்து அளவுக்கு அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட வர்த்தமானியிலுள்ள அடிப்படை சம்பளத்தில் அரைவாசி கூட வழங்கப்படுவதில்லை.

இந்த தகவல் செந்தில் தொண்டமானுக்கு வழங்கப்பட்டதை அடுத்து தொழிலாளர்களைத் சந்திப்பதற்கு தேயிலைத் தோட்டத்துக்கு நேரடி விஜயம் மேற்கொண்டு, தேயிலைத் தோட்டங்களை ஆய்வு செய்தமையுடன், தொழிலாளர்களுடன் இது சம்பந்தமான கலந்துரையாடல் மேற்கொண்டார்.

தொழிலாளர்கள் மீதான இவ்வாறான அணுகுமுறை தொடருமானால் நிர்வாகத்திற்கு எதிராக மிகக் கடுமையான தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என நிர்வாகத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

**University of Jaffna**

**Vacancy - Post of Temporary Demonstrator - Faculty of Medicine**

Applications are entertained from those who have passed the final examination of the MBBS or BSc degrees obtained in Allied Health Sciences from the State Universities or UGC recognized foreign Universities. *(Priority will be given to the MBBS graduates. Research experience in the relevant fieldis preferable)*

Salary Scale :Rs 40,920.00 (Fixed)

Interested candidates with the required qualifications are requested to send scanned copies of relevant certificates along with their duly filled applications in the prescribed application format.

Application forms and other details are available in the Faculty of Medicine website: **http://www.med.jfn.ac.lk/wp-content/uploads/2021/01/APPLICATION-Form.pdf**

Applications with scanned copies of candidates should be sent **on or before Tuesday,28.12.2021** to the following email address:**fomvacancy@univ.jfn.ac.lk**

Prescribed application form downloaded from the website must accompany paid bank slip for the deposit of a sum of Rs.100.00 credited to the people's Bank Account No (Ref No): 970000090000387 in favor of Bursar, University of Jaffna.

Selection interview for the above post will be held via online on **Thursday, 30th of December 2021 at 2.00pm** for eligible candidates with notice by email.

Registrar
University of Jaffna
23.12.2021

**UNIVERSITY OF JAFFNA**
**FACULTY OF TECHNOLOGY**

**POSTPONEMENT OF WALK – IN – INTERVIEW**
**(Temporary Lecturers and Temporary Demonstrators)**

Walk – In – Interview scheduled to be held on **28.12.2021** has been postponed due to unavoidable circumstances. The interview will be held on **30.12.2021** at **9.30 a.m** at the **Board Room of Faculty of Agriculture, Kilinochchi Premises, University of Jaffna.**

**Registrar,**
**University of Jaffna.**
**23.12.2021.**

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அதிமோதாவித்தன இராஜதந்திரம்

**ஆடிக் கறப்பதை ஆடிக் கறக்க வேண்டும். பாடிக் கறப்பதைப் பாடிக் கறக்க வேண்டும். ஆடியோ, பாடியோ கறக்க வேண்டியதை அழுத்தம் கொடுத்தோ, மிரட்டியோ கறக்க முடியாது.**

**இந்த அடிப்படைத் தத்துவம் கூட விளங்காததாக இருக்கின்றது இலங்கையின் இராஜதந்திரம்.**

**இராணுவப் பின்னணி கொண்ட – எதையும் ஆயுத முனையில், அத்துமீறிக் கையாளும் பரவணி மிக்க – படைத் தரப்பினரிடம் இராஜதந்திர விவகாரங்களைக் கையாளும் பொறுப்புகளும் போனமையால் வந்த வினை போலும் இந்நிலைமை.**

**இந்தப் பிராந்தியத்தின் வல்லாதிக்க சக்தி இந்தியா. இலங்கையைப் பொறுத்தவரை அருகில் இருக்கும் பெரியண்ணன்.**

**வலுச் சமநிலையிலும், பொருளாதாரத்திலும், சனத் தொகையிலும், விஸ்தீரணத்திலும் எம்முடன் ஒப்பிடுகையில் பல நூறு மடங்கு பெரிய நாடு பாரதம்.**

**நாமும் சுதந்திரமும், சுயாதீனமும், இறைமையும் கொண்ட நாடு என்று கருதிக் கொண்டு சும்மா போய் இந்தியாவுடன் முட்டி மோதமுடியாது. சீனப் பூதத்தைக் காட்டி பெரியண்ணன் இந்தியாவை அச்சுறுத்தும் – சிக்கலில் மாட்டும் – கைங்கரியத்தில் ஈடுபடக் கூடாது; ஈடுபட முடியாது.**

**சாதாரண இராஜதந்திர விடயங்களிலேயே அப்படிச் செய்ய முடியாது என்பது கள யதார்த்தமாக இருக்க, இந்தியாவிடம் பிச்சாபாத்திரம் ஏந்தி, தண்டல் பெறப் போகும் கொழும்பு, அதிகளவு பிச்சையை, விரைந்து பெறும் தந்திர நோக்கு என்ற கணிப்பில் இந்தியாவுக்கு அழுத்தம் கொடுத்து, அதிகம் சுவீகரிக்கத் திட்டமிட்டிருக்கின்றது.**

**படுமுட்டாள்தனமான இராஜதந்திரம் இது. முதலுக்கே மோசம் விளைவிக்கும் அணுகுமுறையும் கூட.**

**பொருளாதார ரீதியில் மீள முடியாத உச்ச நெருக்கடியில் மூழ்கிக் கிடக்கின்றது இலங்கை. பிறக்கும் ஜனவரியுடன் கடனிறுக்க முடியாத வங்குரோத்து நிலைமையை எட்டும் ஆபத்தில் நிற்கின்றது அது.**

**பொருளாதார வீழ்ச்சி நிலையில் இருந்து பிணை எடுப்பதற்கு புதுடில்லியிடம் பிச்சைப் பாத்திரம் ஏந்தியிருக்கின்றது. எவ்வளவு பிச்சை தெரியுமா? கொஞ்சநஞ்சமல்ல. இரண்டு பில்லியன் – அதாவது இருநூறு கோடி – அமெரிக்க டொலர். இலங்கைப் பணத்தில் கூறுவதானால் சுமார் ஐம்பதாயிரம் கோடி ரூபா.**

**அதை வழங்குவதற்கான திட்டங்களுக்கு இணங்கியிருக்கும் புதுடில்லி, அது தொடர்பான ஒழுங்கு முறைகள் குறித்து இப்போது தீவிரமாக ஆராய்ந்து, பரிசீலித்து வருகின்றது.**

**அதற்கிடையில் –**

**சீனத் தூதுவரை யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வந்து இந்தியாவைச் சீண்டும் மோசமான நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றது கொழும்பு.**

**மறுபுறம், திடீரென இந்திய மீனவர்களுக்கு எதிராகப் பாய்ச்சலைக் கட்டவிழ்த்து, மீனவர்களை அவர்களின் படகுகளுடன் மடக்கி வருகின்றது.**

**இவை, இந்தியாவை அழுத்தத்துக்குள் ஆழ்த்தி, அதிகளவு உதவித் திட்டங்களுக்கு விரைந்து புதுடில்லியை இணங்க வைக்கும் இராஜதந்திரம் எனக் கொழும்பு கருதுகின்றது போலும்.**

**இது காயை அடித்துப் பழுக்க வைக்க முன்னெடுக்கப்படும் முட்டாள்தனம் போன்றது.**

**கிடைக்கும் உதவியையும் இல்லாமல் செய்யப்பண்ணும் அதிமேதாவித்தனம்.**

**எதேச்சதிகாரப் போக்குடைய – இராணுவப் பின்னணி கொண்ட – காட்டுத் தர்பார் நபர்களிடம் இராஜதந்திர விடயங்களைக் கையாளும் அதிகாரமும் போனமையால் ஏற்பட்ட விளைவு இது. நாட்டின் துரதிஷ்டமும் கூட.**

### பேரழிவை நோக்கி நகரும் இலங்கை

## இங்குள்ள வங்கிகளில் வைப்பிலிட்ட புலம்பெயர்ந்தவர்கள் நிலை என்ன?

### கொழும்பு பல்கலை பொருளியல்துறை பேராசிரியர் கருத்து

பொருள்களை நாங்கள் இறக்குமதி செய்கின்றோம், அரிசி உட்பட அத்தியாவசியப் பொருள்கள் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த போதும் அவற்றுக்குத் தேவையான அந்நியசெலாவணி கையிருப்பை வங்கிகள் விடுவிக்காத காரணத்தால் கொழும்பு துறைமுகத்தில் இருக்கின்ற கொள்கலன்களில் இருந்து நாட்டுக்கு பொருள்கள் வர முடியாத நிலைமை இருக்கின்றது. இறக்குமதியாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என கொழும்பு பல்கலைக்கழகத்தினுடைய பொருளியல்துறை பேராசிரியர் கலாநிதி கோபாலப்பிள்ளை அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

ஊடக நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு - இலங்கையின் பொருளாதாரம் தற்போது நாளுக்கு நாள் பின்தள்ளப்பட்டுக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் சர்வதேச நிதித் தர மதிப்பீட்டிலும் கூட இலங்கை தனது நிலையில் இருந்து கீழிறங்கியிருக்கின்றது.

இப்படியான நிலையில் இலங்கையினுடைய பொருளாதார சூழ்நிலையை எப்படி அரசு கையாள்கின்றது இதில் ஏற்படப் போகின்ற சாதக பாதக நிலைமைகள் தொடர்பாக தெளிவாக அவர் விவரித்துள்ளார்.

## கடும் மன அழுத்தத்தில் நான் இருக்கின்றேன்!

### மத்தியவங்கி ஆளுநர் பகிரங்கம்

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையில், நான் கடும் மன அழுத்தத்தில் இருக்கிறேன் என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், எவ்வாறான பிரேரணைகள் முன்வைக்கப்பட்டாலும் சர்வதேச நாணய நிதியத்திடம் கடனைப் பெறுவதற்கு செல்லப் போவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்வது பெரும் ஆபத்து எனவும், நாட்டின் பொருளாதார பிரச்சினைகளை சர்வதேச நாணய நிதியத்திடம் செல்லாமலேயே சமாளிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடனை வேறுவிதமாக நிர்வகித்தால் பிரச்சினை இல்லை எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். இந்நிலையில், சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு கடன்களை பெற்றுக்கொள்வது அர்த்தமற்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்வதன் மூலம் முதலீட்டாளர்களோ சுற்றுலாப் பயணிகளோ இலங்கைக்கு வரமாட்டார்கள் எனவும் மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

தற்போது சர்வதேச நாணய நிதியத்திடம் சென்றால், வட்டி விகிதத்தை உயர்த்துவது, ரூபாவை மிதக்க அனுமதிப்பது, நாட்டின் வளங்களை விற்பது, ஊதியத்தை குறைப்பது போன்ற நிபந்தனைகளை விதிக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த சூழ்நிலையில் தான் மன அழுத்தத்தில் இருக்கிறேன் எனவும், மன அழுத்தத்தை மகிழ்ச்சியுடன் சகித்துக் கொள்கிறேன் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நீதி அமைச்சர் பதவியிலிருந்து அலி சப்றியை உடன் நீக்குக!

### ஞானசார தேரர் போர்க்கொடி

நீதி அமைச்சர் பதவியில் இருந்து அலி சப்றி உடனடியாக நீக்கப்பட வேண்டும் எனவும் அவர் நீதி அமைச்சர் பதவியில் இருக்கும் வரையில் சஹ்ரான் செய்த குற்றங்களுக்கு நியாயத்தைப் பெற்றுக் கொள்ள முடியாது எனவும் பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளரும் 'ஒரே நாடு - ஒரே சட்டம்' ஜனாதிபதி செயலணியின் தலைவருமான கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

'ஒரே நாடு - ஒரே சட்டம்' ஜனாதிபதி செயலணியின் தலைமைத்துவம் தொடர்பாகப் பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ளதுடன், நீதி அமைச்சர் உள்ளிட்ட ஆளுந்தரப்பு உறுப்பினர்கள் தமது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ள நிலையில் அதற்குப் பதில் தெரிவிக்கும்போதே ஞானசார தேரர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

'ஒரே நாடு - ஒரே சட்டம்' ஜனாதிபதி செயலணி உருவாக்கத்தின் போதும், அதில் என்னைத் தலைவராக நியமித்துள்ளதற்கும் பல்வேறு விமர்சனங்கள், அவதூறு கருத்துக்கள் எழுவதை அவதானித்தே வருகின்றேன். ஆனால், இவற்றை நாம் கருத்தில்கொள்ளப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளார்.

## ஐரோப்பிய நாடுகள் போன்று காட்சியளிக்கும் நுவரெலியா

நுவரெலியா நகர சபை எல்லையின் பல இடங்களில் கடந்த புதன், வியாழன் பனித் துளிகள் விழுந்துள்ளன.

ஒவ்வொரு வருடமும் நத்தார் காலப்பகுதியில் நுவரெலியாவில் பனித்துளிகள் விழுவது வழக்கமாக இடம்பெறும் ஒரு நிகழ்வாகும்.

நுவரெலியா ப்லெக்பூல் பிரதேசத்தில் மரக்கறித் தோட்டங்கள் மற்றும் விவசாய இடங்களிலும், தேயிலைத் தோட்டங்களிலும் பனித்துளிகளை அவதானிக்க முடிந்துள்ளது.

பனித்துளி விழுவதைத் தொடர்ந்து நுவரெலியா பிரதேசம் முழுவதும் கடும் குளிர் நிலவி வருகின்றது.

இந்த காலநிலையால் மரக்கறிகள் மற்றும் தேயிலை பயிர்செய்கைகளுக்கு கடும் பாதிப்பு ஏற்படுவதாக நுவரெலியா பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

'லிட்டில் லண்டன்' என பெயர் கொண்டு அழைக்கப்படும் நுவரெலியா, ஐரோப்பிய நாடுகளைப் போன்று காட்சியளிப்பதாக சுற்றுலாப் பயணிகள் தெரிவித்துள்ளனர்.

# பொலிஸார் முதல் கிராம உத்தியோகத்தர் வரை அனைத்துத் தரப்பினரும் இலஞ்சம் பெறுகின்றனர்

## பிள்ளையான் குற்றச்சாட்டு



மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் பல்வேறு வேண்டத்தகாத செயற்பாடுகளைத் தடுக்க முடியாமைக்கு காரணம் பொலிஸார் தொடக்கம் கிராம உத்தியோகத்தர்கள் வரையில் இலஞ்சம் பெறும் சம்பவங்கள் நடைபெறுகின்றமையாகும் என மாவட்ட அபிவிருத்திக்குழுவின் இணைத்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு, களுவாஞ்சிகுடி பிரதேச செயலகத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி தொடர்பில் ஆராயும் விசேட கூட்டம் களுதாவளை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

2022ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்டம் ஊடாக கிராமிய பொருளாதாரத்தின் ஊடாக உணவுப் பாதுகாப்பு என்னும் தொனிப்பொருளில் முன்னெடுக்கப்படும் கிராமிய உற்பத்தி திட்டம் தொடர்பில் ஆராயும் வகையில் இந்த அபிவிருத்திக் கூட்டம் நடத்தப்பட்டது.

களுவாஞ்சிகுடி பிரதேச செயலாளர் சிவப்பிரியா வில்வரெட்னத்தின் ஒழுங்குபடுத்தலில் நடத்தப்பட்ட இந்தக் கூட்டத்தில் பொதுஜன பெரமுனவின் அமைப்பாளர் பா. சந்திரகுமார், உதவி திட்டமிடல் பணிப்பாளர் நிர்மல் உட்பட பலர் கலந்துகொண்டனர். இதன்போது களுவாஞ்சிகுடி பிரதேச செயலகத்திற்குட்பட்ட 46 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் முன்னெடுக்கப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

குறிப்பாக எதிர்வரும் ஜனவரி மாதம் நிறைவடைவதற்குள் கிராமிய உற்பத்தி தொடர்பான அனைத்துத் திட்டங்களையும் அரசாங்கத்துக்கு வழங்கும் வகையில் அதிகாரிகள் நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும் என மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவரால் இங்கு அறிவுறுத்தப்பட்டது.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர் –

இன்று எமது பெண் பிள்ளைகள் மிகமோசமாகப் பாதிக்கப்படுகின்றனர், சுரண்டப்படுகின்றனர், பிழையான வழிகளுக்கு இழுத்துச்செல்லப்படுகின்றார்கள். இதுமிகப்பெரும் தாக்கத்தை இன்று செலுத்தியுள்ளது.

நீதிமன்ற நடவடிக்கைகளை அவதானிக்கும்போது பல விடயங்கள் தெரியவந்துள்ளன. சட்ட ரீதியாக பிள்ளைகளை தத்துக்கொடுக்கின்ற நிலைமைகள் அதிகளவில் நடைபெற்று வருகின்றன.

அதேபோன்று வறுமை காரணமாக பல்வேறு சீரழிவுகள் நடைபெறுகின்றன. நாங்கள் உத்தியோகத்தர்களாக இருக்கின்ற கிராமத்தில் இவையெல்லாம் ஏன் நடைபெறுகின்றன என அரசாங்க உத்தியோகத்தர்கள் சிந்திக்கவேண்டும்.

இதன்ஒரு கட்டமே மட்டக்களப்பில் நடைபெற்ற படுகொலைச் சம்பவம். சிறுவயதிலேயே குறித்த பெண் விடுதியொன்றில் விடப்பட்டு சீரழிக்கப்பட்டுள்ளார். அதன் காரணமாக ஏதோவொன்றுக்கு அடிமையான நிலையிலேயே அந்தக் கொடூர சம்பவம் நடைபெற்றுள்ளது. பெண்ணொருவர் படுகொலை செய்த சம்பவத்தை நாங்கள் சாதாரணமாக எடுத்துக்கொள்ளமுடியாது. இவ்வாறான சம்பவங்கள் ஏற்படாமல் காப்பதுதான் எங்களது பொறுப்பு. இன்று எந்தவித சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட முடியாமல் உள்ளது. காரணம் அனைத்துக்கும் இலஞ்சம் பெறும் செயற்பாடாகும். பொலிஸார் தொடக்கம் கிராம உத்தியோகத்தர்கள் வரையில் இலஞ்சம் பெறப்படுகின்றது. – எனக் குறிப்பிட்டுள்ளார்.

# கோண்டாவிலில் வன்முறைக் கும்பல் நேற்றைய தினம் அட்டகாசம்







கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்திற்கு அலுகிலுள்ள வர்த்தகரின் வீட்டு வளாகத்துக்கு புகுந்த கும்பல் அட்டூழியத்தில் ஈடுபட்டுள்ளது.

வீட்டின் முன் நிறுத்திவைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை எடுத்துச் சென்று உப்புமடச் சந்தியில் போட்டு சேதப்படுத்திவிட்டுச் சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று(வியாழக்கிழமை) அதிகாலை 5.15 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

3 மோட்டார் சைக்கிள் மற்றும் ஓட்டோவில் வந்த வன்முறைக் கும்பலே இந்தத் தாக்குதலை மேற்கொண்டதாக கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

புன்னாலைக்கட்டுவன் சந்தியில் அலைபேசி வர்த்தக நிலையத்தை நடத்திவருபவரின் வீட்டிலே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## எரிபொருள்களின் விலை அதிகரிப்பை அடுத்து

# மின்சாரம், தண்ணீர் கட்டணமும் எகிறும் நிலை!

எரிபொருள்களின் விலை அதிகரிப்பு காரணமாக மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டால் தண்ணீருக்கான கட்டணத்தை அதிகரிக்க நேரிடும் என நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக உரிய பிரிவினருடன் கலந்து ரையாடல் நடத்தப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலை அதிகரிப்பு நீர் விநியோக அமைப்பிற்கு ஒரு பிரச்சினையல்ல என்றும் எனினும் மின்சாரக் கட்டணத்தை உயர்த்தினால் அது பிரச்சினையாக இருக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

எப்படியாவது மின்கட்டணம் உயர்த்தப்பட்டால், செலவினங்களை சமன் செய்ய வழிவகை செய்ய வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனால், தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்தும் நுகர்வோர் தவிர்த்து, நுகர்வோருக்கு தண்ணீர் கட்டணத்தை உயர்த்துவதற்கு தமது அமைச்சு உத்தேசித்துள்ளதாக அமைச்சர் நாணயக்கார தெரிவித்துள்ளார்.

எனினும் குடிதண்ணீர் கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பாக இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

# மட்டு. மாவட்ட தமிழரசு வாலிப முன்னணி தலைவரின் வீட்டில் மயக்கமருந்து தெளித்து கொள்ளை முயற்சி







மட்டக்களப்பு – ஜெயந்திபுரம் பகுதியிலுள்ள இலங்கை தமிழரசுக்கட்சியின் வாலிப முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட தலைவரின் வீட்டில் மயக்கமருந்து தெளித்து கொள்ளையிட மேற்கொள்ளப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது.

ஜெயந்திபுரம் பகுதியிலுள்ள தமிழரசுக்கட்சியின் வாலிப முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட தலைவர் தீபாகரனின் வீட்டிலேயே இந்த கொள்ளை முயற்சி சம்பவம் நடைபெற்றுள்ளதாக மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

வீட்டில் மனைவி தனியாக இருந்தபோது, அங்கு வந்த பெண் கணவரின் பெயரைக் கூறி அழைத்தபோது நான் வெளியே சென்றேன் என மனைவி கூறியுள்ளார்.

இதன்போது தான் கணவரிடம் சமாதான நீதிவான் கையொப்பம் பெறவந்தேன் எனவும் அதனை பெற்று வைக்குமாறும் கூறிய என்மீது மயக்க மருந்தை விசிறினார்.

எனினும் சுதாகரித்துக்கொண்ட நான் குறித்த பெண்ணை பிடிக்க முனைந்தபோது அங்கு வந்த ஆண் ஒருவர் அவரை இழுத்துக்கொண்டு ஓடிச்சென்று மோட்டார் சைக்கிள் ஒன்றில் ஏறிச் சென்றுவிட்டார் என வாலிப முன்னணியின் தலைவரின் மனைவி தெரிவித்தார்.

இது தொடர்பில் மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதேநேரம் சம்பவம் நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் வாலிப முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட தலைவரின் வீட்டுக்கு சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் சம்பவம் தொடர்பில் கேட்டறிந்தமையுடன், இதுதொடர்பான முழுமையான விசாரணைகளை முன்னெடுக்குமாறு மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா போர்னாட யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 230

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**595. தமிழர் தகவல் நடுவகத்தின் சமர்ப்பணத்தில் இனப்படுகொலையை யதார்த்தப்படுத்திய தீர்மானங்கள் இல்லையே?**

இது சர்வதேச மனித உரிமை மன்றுக்கு ஆக்கப்படும் சமர்ப்பணமல்ல. இது அரசியல் தீர்வு பற்றியது. தீர்வுக்கான அடிப்படைக் காரணங்களும் அட்டூழியங்களும் எடுத்துச் சொல்லப்பட்டுள்ளன.



மொஹான் பீரிஸ்

மனித உரிமை மீறல்களுக்கு எதிராக ஐ.நா. கட்டமைப்புக்களில் முன்னேறுவதற்கு சர்வதேச சட்டத்தரணிகள், சட்ட ஆய்வாளர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டு அந்தக் குழு அவற்றை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். இவை சட்டங்களை அடிப்படையாகக் கொண்டவை. அவற்றுக்கு அரசியல்வாதிகள் மனித உரிமை மன்று கூடும் காலங்களில் முகம் கொடுத்து விட்டுப் போவதால் நன்மைகள் கிட்டுவதில்லை. அவைகள் ஆரவாரங்களே.

கோடிஸ்வரனது வழக்கைப் பற்றியும் தமிழ் மக்கள் அதனை மேலெடுக்காதமை பற்றிய அசிரத்தையும் முன்னர் விவரித்திருந்தேன். அதே போலானது தான் சோலைமுத்து ராசு என்பவரின் காணிகள் பற்றி 13 ஆம் திருத்தத்தின் அடிப்படையில் உயர் நீதிமன்றம் 2013 இல் ஆக்கிய தீர்ப்புக் குறித்தும் சொல்லலாம். அதில் காணி அதிகாரங்கள் 13 ஆம் திருத்தத்தின் கீழ் மத்திய அரசுக்கா, மாகாண அரசுக்கா உரியது என்பதில் அன்றைய பிரதம நீதிபதி மொஹான் பீரிஸ், நீதியரசர்கள் சிறிபவன், ஈவா ஜயசுந்தர அவை மத்திய அரசின் கையிலேயே இருக்கின்றன எனத் தீர்ப்பு தந்தனர். மூன்று நீதியரசர்களும் தனித் தனியாக மூன்று தீர்ப்புக்கள் தந்தாலும் அவை இறுதியாக அந்த நிலையை ஏற்றுக் கொண்டன. அந்த தீர்ப்பு அரசமைப்புச் சட்டத்தின் கீழ் 13 ஆம் திருத்தத்தையும் மாகாண சபைகளின் இருப்பையும் ஆராய்ந்தது. அந்தத் தீர்ப்பு மேலும் அதிகாரங்கள் கேட்பவர்களுக்கும் அவை அரசமைப்புச் சட்டத்தை விலத்திப் போவதற்கும் ஊக்குவிப்பதற்கு புரிந்து கொள்ள வேண்டியதையும் கூறுகிறது. சிங்களப் பெரும்பான்மை காலம் காலமாக நியாயப்படுத்திய ஒரு நாடு. அங்கு நாட்டு மக்களில் எவரும் எந்த மாகாணத்திலும் குடியிருக்கலாம். ஒரு குறிப்பிட்ட பிரதேசம் அவர்களுடையது எனக் கோருவதற்கு முடியாது. அந்தப் பிரதேசத்தினுள்ளவர்கள்தான் காணிகளுக்கு அங்கு முன்னுரிமை பெற வேண்டும் என்ற வாதத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை ஊர்ஜிதப்படுத்தியது.

அந்தத் தீர்ப்பை உயர்நீதிமன்றத்திற்கு மேலே போய் மீளாய வழியில்லை. இதற்கு 13 ஆம் திருத்தமும் ஒப்பந்தமும் இந்தியாவும் குறைகூறப்பட்டனவே ஒழிய சிங்களப் பெரும்பான்மையின் தந்திரங்களும் அது எடுக்கும் வியூகங்களும் நீதிமன்றங்களின் மூலம் இவை திசை திருப்பப்படுவது புரிந்து கொள்ளப்பட்டு காரியங்கள் ஆற்றப்படுவதில்லை. சலிப்பில் ஒரு சோர்வான சுற்றாடல்களே உருவாக்கப்பட்டன. அரசியல் தலைவர்களோ அவர்களது வழிகாட்டல்களில் ஒரு கட்டமைப்பு நாட்டிலிருந்தோ புலம் பெயரிலிருந்தோ அந்தத் தீர்ப்பை அல்லது அரசாங்கத்தின் நடவடிக்கையை சர்வதேச அடிப்படைகளில் விசாரணைகளுக்கு உட்படுத்தப்படவில்லை. சர்வதேச குடியியல் அரசியல் உரிமைகள் சட்டத்தின் கீழ் (international Civil Political Rights) அவற்றின் நடைமுறைகளுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஐ.நாவின் கட்டமைப்புக்களுக்கு இவற்றை விசாரணை செய்யுமாறு கோரப்படவில்லை. அதற்குரிய கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படவும் இல்லை. தமிழ் மக்கள் 13 ஆம் திருத்தத்தை ஏற்கவில்லை என்பதால் இவை இந்தியாவுடன் அரசியல் ரீதியாக பேசப்படவில்லை. மாதத்துக்கு மாதம் புலம் பெயரில் ஒவ்வொரு குழு உருவாகி, ஒருவரை ஒருவர் வசைபாடி, தேசியத்தை வளர்க்கப் புறப்படுவார்கள். தேசிய அழிவுகளை தடுத்து நிறுத்த வேண்டிய இவ்விதமான ஆக்கபூர்வ வேலைகளில் கவனம் செலுத்துவது குறைவு. அடையாளங்களுக்காக ஆள் சேர்ப்பதிலேயேதான் காலங்கள் கழிகின்றன.



சரத் என் சில்வா

**596. தற்சமயம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இரண்டு சமர்ப்பணங்கள் பதியப்பட்டுள்ளனவே?**

அவை இரண்டுமே நேரடியாக இனப்படுகொலை என்ற குற்றச்சாட்டுக்களில் சமர்ப்பிக்கப்பட்டவை அல்ல. இனப்படுகொலைகள் நடத்தப்பட்ட பின்னணியில் பாதிக்கப்பட்டு புலம்பெயரில் இருக்கும் மக்கள் அவர்கள் அகதிகளோ, நிரந்தர குடியுரிமை பெற்றவர்களோ தங்கள் சொந்த நாட்டிற்கு திரும்பி அங்கு வாழ முடியாத நிலை அரசாங்கத்தின் போக்குகளால் இருக்கிறது. நடத்தப்பட்டவை, அவற்றின் தாக்கங்களால் இந்த மக்கள் வெளியேறியமை, வெளியேற்றப்பட்டமை யாவும் சர்வதேச சட்டங்களுக்கு முரணானவை, அப்படியான சர்வதேச குற்றங்களை ஆராய்ந்து அவற்றுக்குப் பொறுப்பாக சுட்டிக்காட்டுபவர்கள் தண்டிக்கப்பட்டு, இந்த மக்கள் சுதந்திரமாகவும் பயமின்றியும் போய் வரக்கூடிய சூழ்நிலைகளை ஏற்படுத்த வேண்டும் என்பதே சமர்ப்பணங்களின் சாரம். அதனை ஒட்டி மேலும் சமர்ப்பணங்கள் கொடுக்கப்படலாம்.

இந்த சமர்ப்பணங்கள் நாட்டுக்குத் திரும்பும் உரிமையும் அவர்கள் வெளியேற்றப்பட்ட காரணங்களின் ஆதாரங்களிலேயே பதியப்பட்டுள்ளன.

அந்த சமர்ப்பணத்தில் ஈடுபட்டிருந்த பிரதான தமிழ் சட்டத்தரணி ஒருவருடன் இணைய தளத்திலான சந்திப்பில் கலந்துரையாடினேன். அதில் எவ்வளவோ வருடங்களாக தமிழ் மக்கள் முன்னெடுக்கக் கூடிய சர்வதேச அடிப்படைகளிலான வழக்குகள் பற்றி பேசினோம். அவை யாவுமே சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திலல்ல, ஐ.நாவின் மற்றைய கட்டமைப்புக்களின் முன்னால் அதிக செலவுகளின்றி செய்யப்படக் கூடியவை. இந்தியாவில் குடியேறி இருக்கும் மக்கள் தங்கள் வதிவிடங்களையும் இழந்து வன்முறைகளால் பலவந்தப்படுத்தப்பட்டு வெளியேற்றப்பட்டவர்கள். அவர்கள் தங்கள் பிரதேசங்களுக்குத் திருப்பி அனுப்பி மீள் குடியேற்றப்பட வேண்டும் என்பதும் தேர்தல்களில் அவர்களது வாக்குரிமை நிலைநாட்டப்பட வேண்டும் என்பதும் ஒப்பந்தத்தின் சரத்துக்கள்.

சோலைமலை வழக்கினை அரசு தனக்கு சார்பாகவே அவர்களுக்கு அரசியல் அனுசரணை தரும் நீதியரசர் மொஹான் பீரிஸ் போன்றோர் மூலமாக பெற்றுக் கொண்டது. இதே தந்திரத்தில்தான் வடக்கு - கிழக்கு மாகாணங்களைப் பிரிப்பதற்கான தீர்ப்பை பிரதம நீதிபதி சரத் சில்வாவின் அனுசரணையில் பெற்றது.

International Covenant on Civil and Political Rights

சோலைமலையின் வழக்குத் தீர்ப்பின் ஆதாரத்தில், நல்லாட்சி அரசும் கோட்டாபய அரசும் வெளிப்படையாகவே ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொண்ட சரத்துக்களுக்கு மாறாக செயல்படுகிறது. இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை ஒக்லண்ட் நிறுவனம் (Oakland Institute) ஆவணப்படுத்தியது. இவை இணையக் கருத்தரங்குகளில் பதியப்பட்டாலும் தமிழர் தகவல் நடுவம் இதனை தற்போது ஆவணவடிவாக சர்வதேசத்திற்கு பரப்புரை செய்கிறது.

இந்த அத்துமீறிய அபகரிப்புக்கள் தனிமனித, அந்த மனித குழுமத்தின் காணி வாழ்வாதாரம் போன்றவற்றின் மேல் மேற்கொள்ளப்படும் ஆக்கிரமிப்புகள் (Aggression) ஒப்பந்தத்தின் சரத்துக்கள் அதன் நோக்கங்கள் அமைந்த விதத்தில் முள்ளிவாய்க்கால் அட்டூழியங்களின் பின் நடத்தப்படும் இவ்வகையான ஆக்கிரமிப்புக்கள் சர்வதேச சட்டங்களின் கீழ்க் குற்றங்கள். அதன் அடிப்படையில் இந்தியாவிலுள்ள அகதிகளின் நிலையையும், தற்போது நடைபெறும் ஆக்கிரமிப்பு அபகரிப்புக்களையும் சேர்த்து ஆக்கிரமிப்பாக (Aggression) எனக் குற்றவியல் சட்டங்களுக்கமையவோ அல்லது ஐ.நாவின் மற்ற கட்டமைப்புக்களின் முன்னோ சமர்ப்பணங்கள் பதியப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்வது பற்றிச் சிந்தித்தல் வேண்டும். இது 13 ஆவது திருத்தத்தைக் கொண்டதல்ல. ஒப்பந்தத்தின் அடிப்படை அவற்றை நடைமுறைப்படுத்த கேட்க, இவை சர்வதேச ரீதியில் இந்தியாவிற்கும் அழுத்தங்களைத் தரும்.

(வளரும்)



# ஜே.வி.பியுடன் இணைந்து பயணிக்க தயாராகும் சு.க.!

## தயாசிறி ஜயசேகர அறிவிப்பு



ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பை வலுப்படுத்துவதற்கான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கமைய மக்கள் விடுதலை முன்னணியை (ஜே.வி.பி.) போன்ற தூய்மையான கட்சியுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இணைந்து பயணிப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகமுள்ளன என அந்தக் கட்சியின் பொதுச் செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

2001 ஆம் ஆண்டு சந்திரிகா குமாரதுங்க ஆட்சிக் காலத்திலும், 2005 மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்திலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணியுடன் பேச்சுகளை முன்னெடுத்து ஏற்படுத்திக் கொண்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில் ஆட்சியை அமைத்தது.

எனவே சு.க. - ஜே.வி.பி. இணைவு புதியதொரு விடயமல்ல என்பதையும் தயாசிறி ஜயசேகர சுட்டிக்காட்டினார்.

பற்றிக், கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சில் நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறினார்.

# அமெரிக்கத் தூதரகம் விடுத்த முக்கிய அறிவிப்பு

2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் அமெரிக்கா செல்வதற்கான வீசாவைப் பெற்றவர்களுக்கு கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் முக்கிய அறிவிப்பொன்றை விடுத்துள்ளது.

2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் அமெரிக்க செல்வதற்கான வீசாவைப் பெற்று, கொவிட் பரவல் மற்றும் வேறு காரணங்களால் செல்ல முடியாது போனவர்களை உடனடியாக அமெரிக்க கொன்ஸுலர் அலுவலகத்தை தொடர்புகொள்ளுமாறும் கேட்டுக் கொண்டுள்ளது.

அதற்கமைய, ConsularColombostate.gov என்ற மின்னஞ்சல் முகவரி ஊடாக தம்மை தொடர்புக்கொள்ளுமாறு கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் கேட்டுக்கொண்டுள்ளது.

# மெனிங் பொதுச் சந்தையில் மரக்கறி விலைகள் வீழ்ச்சி!

கொழும்பு மெனிங் பொதுச் சந்தையில் மரக்கறிகளின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக சந்தைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சந்தைக்கு வரும் மரக்கறிகளின் அளவு சற்று அதிகரித்துள்ளதாகவும், எனினும், மரக்கறிகளை கொள்வனவு செய்ய மக்களிடம் போதிய பணம் இல்லையெனவும் மெனிங் சந்தை வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையிலேயே, மரக்கறிகளின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, கடந்த நாட்களில் 650 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ கறி மிளகாய் நேற்று 500 ரூபாவாகக் குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், லீக்ஸ், போஞ்சி, கோவா உள்ளிட்ட மரக்கறிகளின் விலையும் குறைவடைந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# யாழில் பட்டத்துடன் பறந்த இளைஞருக்கு முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டுள்ளது

யாழ்ப்பாணத்தில் பட்டம் ஒன்றை பறக்க விட்டபோது இளைஞர் ஒருவர் பட்டத்துடன் 120 அடிக்கும் மேலும் இழுத்துச் செல்லப்பட்ட காணொலி கடந்த சில தினங்களாக சமூக வலைத்தளங்களில் மிகவும் வைரலாக பரவி வருகின்றது.

இந்த நிலையில், பட்டத்துடன் இழுத்துச் செல்லப்பட்ட குறித்த இளைஞனுக்கு முள்ளந்தண்டில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

120 அடிக்கும் மேல் உயர இழுத்துச் செல்லப்பட்ட மனோகரன் என்ற குறித்த இளைஞர் முப்பது அடி உயரத்தில் இருந்து கீழே குதித்து உயிர் தப்பினார்.

இதன்போது அவரது உடலில் அடிபட்டதாகவும், இதன் காரணமாக முள்ளந்தண்டில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் சம்பவத்தை அடுத்து வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட இளைஞன் மூன்று நாள்களின் பின்னர் சிகிச்சைப் பெற்று தனது விருப்பத்தின் பேரில் வீடு திரும்பியுள்ளார். எனினும், தற்போதும் முள்ளந்தண்டில் வலி ஏற்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# 12 வயதுக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு தடுப்பூசி

12 வயதுக்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு கொரோனாத் தடுப்பூசியின் முதலாவது டோஸ் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேநேரம், 16 வயதுக்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்களுக்குத் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் வழங்குவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார். இந்தநிலையில், 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மூன்றாவது தடுப்பூசியை வழங்குவதற்கான நடவடிக்கை அனைத்து மாவட்டங்களிலும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மட்டு. உப்போடை ஆற்றில் மீட்கப்பட்ட சடலம் அடையாளம் காணப்பட்டது

மட்டக்களப்பு உப்போடை ஆற்றில் உருக்குலைந்த நிலையில் கடந்த புதன்கிழமை மீட்கப்பட்ட சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

மேற்படி சடலம் மட்டக்களப்பு மோகோந்திரன் வீதியைச் சேர்ந்த 37 வயதுடைய தோமஸ் காந்தமூர்த்தி செந்தூரன் என அவரது மனைவியால் அடையாளம் காணப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 20 ஆம் திகதி திங்கட்கிழமை ஒருவர் கல்லடி பாலத்தில் இருந்து ஆற்றில் குதித்து தற்கொலை செய்துள்ளார் எனப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்ததையடுத்து பொலிஸார் அப்பகுதியில் தேடினர்.

இந்நிலையில் அன்றைய தினம் காந்தமூர்த்தி செந்தூரன் வீட்டை விட்டு வெளியேறிய பின்னர் காணாமல் போயுள்ளார் என அவரது மனைவி, உறவினர் தேடி வந்தனர். இதனைத் தொடர்ந்து புதன்கிழமை உப்போடை பகுதி ஆற்றில் கரையொதுங்கிய சடலத்தை அவரது மனைவி பார்த்து அது தனது கணவர் என அடையாளம் காட்டியுள்ளார்.

இதனையடுத்து சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆளும் கட்சி உறுப்பினருக்கு அரசால் பிராடோ வாகனப் பரிசு





அரசாங்கத்தின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினரான திஸ்ஸ குட்டி ஆராச்சிக்கு புதிய பிராடோ ரக வாகனம் கிடைத்துள்ளதாகத் தெரியவருகிறது.

ஆளும் கட்சியின் சார்பில் கடந்த காலத்தில் தீவிரமாக குரல் கொடுத்து வந்த காரணத்தால், திஸ்ஸ குட்டி ஆராச்சிக்கு இந்த பிராடோ வாகனம் வழங்கப்பட்டுள்ளதாக ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அண்மையில் ஒரு நாள் இந்த வாகனத்தில் ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் பயணித்த போது, இந்த வாகனம் தொடர்பில் விசாரித்துள்ளனர்.

சிறப்பான முறையில் அரசாங்கத்துக்கு ஆதரவாகக் குரல் கொடுத்து வந்தேன் எனவும் இதன் காரணமாக பிராடோ வாகனம் கிடைத்தது எனவும் குட்டி ஆராச்சி, சக நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கூறியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் அண்மையில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை சம்பந்தமாக திஸ்ஸ குட்டி ஆராச்சி ஆபாசமாக பதில் உரையாற்றியமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியதுடன் சபாநாயகரும் திஸ்ஸ குட்டி ஆராச்சியை கண்டித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தந்தையுடன் முரண்பட்ட நபரை வெட்டிக் கொலை செய்த மகன்!

குடும்பஸ்தர் ஒருவர் கத்தியால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் மாத்தறை, அக்குரஸ்ஸ பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பபரந்த, கோட்டேகொட பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயது நபரே உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு மரணமடைந்துள்ள நபர், தலஹகம, பெலிகெட்டிய பிரதேசத்திலுள்ள அவரது வீட்டில் சுத்திகரிப்புப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது அயல் வீட்டுக்காரருடன் முறுகலில் ஈடுபட்டுள்ளார். இருவருக்கும் இடையிலான முறுகல் கைகலப்பில் முடிந்த நிலையில், அயல்வீட்டுக்காரரின் மகன் மேற்படி நபரைக் கத்தியால் வெட்டியுள்ளார்.

இந்த சம்பவத்தில் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நபர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அக்குரஸ்ஸ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அனுமதியின்றி இறக்குமதி செய்யப்பட்ட அரிசி மட்டு. சுகாதார அதிகாரிகளினால் முற்றுகை

மட்டக்களப்பு நகரில் உள்ள ஹோட்டல்களில் இருந்து அனுமதியின்றி இறக்குமதி செய்யப்பட்ட அரசி மற்றும் காலாவதி திகதி மறைக்கப்பட்ட நிலையில் பொதி செய்யப்பட்ட அரிசி மூடைகள் பெருமளவு பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களால் மீட்கப்பட்டுள்ளதுடன், குறித்த ஹோட்டல்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

புது வருடம் மற்றும் நத்தார் பண்டிகை காலம் நெருங்கிவரும் நிலையில் மட்டக்களப்பு மாநகரத்திற்குட்பட்ட உணவு விடுதிகள் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களால் தொடர்ச்சியாக சோதனை நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் கே.கிரிசுதனின் ஆலோசனைக்கு அமைவாக பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் இந்த சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்துவருகின்றனர்.

இதன்கீழ் மட்டக்களப்பு நகரில் புளியந்தீவு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தீபன் தலைமையிலான பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் உணவு விடுதிகள் சோதனைக்குட்படுத்தப்பட்டன.

இதன்போது இரண்டு உணவு விடுதிகளில் வெளிநாட்டிலிருந்து அனுமதியின்றி இறக்குமதி செய்யப்பட்ட 120 இற்கும் மேற்பட்ட அரசி மூடைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேபோன்று ஓர் உணவகத்தில் பாவனை திகதி முடிந்த பின்னர் ஸ்டிக்கர் ஒட்டப்பட்டு புதிய பாவனை திகதியுடன் அடுக்கி வைக்கப்பட்டிருந்த சுமார் 86 அரசி மூடைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்துடன் உணவகம் ஒன்றினுள் அனுமதியின்றி ஏறாவூரிலிருந்து கொண்டுவரப்பட்ட 10 கிலோ மாட்டிறைச்சியும் மீட்கப்பட்டதுடன் அதனைக் கொண்டு வந்தவருக்கு எதிராகவும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
(மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா)

# மக்கள் மனத்தில் நிறைந்த மக்கள் திலகம்!

**இன்று எம்.ஜி.ஆரின் நினைவு தினம்**

ஈழத்தில் பிறந்தார். இன்னல் பல கண்டார். எதற்குமே இளைக்காமல் ஏற்றம் பல பெற்றார். இரக்கமே அவருள் எங்கும் வியாபித்து நின்றதால் என்றுமே மக்கள் மனத்தில் நீங்கா இடம்கொண்டார். இதயக் கனியானார். வாழவைத்த தெய்வமானார். கலங்கரை விளக்கமானார். எங்க வீட்டுப் பிள்ளை ஆகி என்றுமே மக்கள் திலகமாக எம்.ஜி.ஆர். விளங்குகிறார்.

அவர்கடந்து வந்த பாதை கல்லும், முள்ளும், காட்டாறுகளும் நிரம்பியதாகும். அவர் தென்றலைத் தீண்டியதில்லை. தேன் தொட்டு நின்றதும் இல்லை. பஞ்சணையில் படுத்ததும் இல்லை. பசியாற உண்டதும் இல்லை. அரைவயிறு, கால் வயிறுதான், அவருக்கும் அவரது குடும்பத்துக்குமே கிடைத்தது.

நல்ல நிலையில் வாழ்ந்த குடும்பம் நலிவடைந்து போனதால் நாட்டை விட்டு நாடுவரும் நிலையங்கு தோன்றியது. தந்தையை இளம் வயதில் பறிகொடுத்துவிட்டு தாயுடனும் சகோதரருடனும் ஈழத்தை விட்டு இந்தியா வந்தனர் எம்.ஜி.ஆர். குடும்பத்தார்.

பசியைப் போக்குவதே பெரும்பாடாக இருந்தமையால் படிப்பு என்பதை நினைத்துப் பார்க்கவே முடியாத ஒன்றாகி இருந்தது. பாலகனான எம்.ஜி.ஆர். மூன்றாம் வகுப்புடன் பள்ளியை விட்டு நாடகத்துறைக்குள் புகுந்துவிடும் நிலை உருவானது. வருமானத்துக்கு நடிப்பே வழிகாட்டியது. எழுத்தாளர் அனுராத ரமணனின் தாத்தா குடிலன் ஆர். பாலசுப்பிரமணியன் எம்.ஜி.ஆரின் ஆசிரியராக இருந்தார். இவர் பிற்காலத்தில் குணசித்திர நடிகரானார்.

நாடகத்தில் இருந்து படிப்படியாக திரைத்துறைக்குள் எம்.ஜி.ஆர். வந்து சேர்ந்தார். 1945 இல் ஜூபிடர் நிறுவனத்தார் எம்.ஜி. ஆரை தமது படங்களான ராஜகுமாரி, அபிமன்யு, படங்கள் வாயிலாக கதாநாயகன் ஆக்கினார்கள்.

1947 - 1948 காலப் பகுதியில் எம்.ஜி.ஆருக்குக் கிடைத்த மாதச் சம்பளம் எவ்வளவு தெரியுமா ரூ350 ஆகும்.

இக்காலகட்டமானது எம்.ஜி.ஆரின் முதல்காலகட்டம் எனக் கொள்ளலாம். சாதாரண எம்.ஜி.ஆராக அவர் இருந்தாலும் அவருக்குள்ளே – தான் முன்னேற வேண்டும் என்னும் வேகமே காணப்பட்டது எனலாம். அவர் யாரையும் நோகடிக்கமாட்டார். முரண்டு பிடிக்கமாட்டார். மரியாதை கொடுப்பார். சற்றுக் கூச்சச் சுபாபம் உள்ளவராகவும் காணப்பட்டார். காந்தியச் சிந்தனை அவர்மனத்தில் அக்காலத்தில் பதிந்து காணப்பட்டது. அவரிடம் கடவுள் நம்பிக்கையிருந்தது. உருத்திராட்சம் அணிந்திருந்தார். அவர் பிற்காலத்தில் தி.மு.கவில் இணைந்திருந்தாலும் சில கொள்கைகளில் விடாப்பிடியாக இருந்தாலும் கடவுள் நம்பிக்கையை பழித்ததோ, குறைகூறியதோ இல்லை என்றே சொல்லலாம்.

பக்தியுள்ளவர்கள் சாமி கும்பிட வேண்டும். சாமி கும்பிட வேண்டாம் என்று நான் சொல்லத் தயாரில்லை. ஆனால் கடவுளின் பெயரால் ஏமாற்ற நினைக்காதீர்கள். மோசடிகள் செய்ய முயலாதீர்கள். என்பதே என் வேண்டுகோள். 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' இதுதான் என் கொள்கை என்று 15/ 12/ 1962இல் மருதமலை முருகன் கோவிலில் எம்.ஜி.ஆர். அவர்கள் பேசி இருக்கிறார்.

எம்.ஜி.ஆர். அவர்களின் ஸ்டூடியோவில் 14 வருடங்கள் பணிபுரிந்தவர் திருமதி ஜோதி பிரபா. எம்.ஜி.ஆரின் கடவுள் நினைப்புப் பற்றி அவரே சொல்லி இருக்கிறார். எம்.ஜி.ஆர். வீட்டில் நடந்த பிறந்தநாள் கொண்டாட்டத்தின் பொழுது கேக்கின் மேல் வைக்கப்பட்ட மெழுகு திரியை அணைத்த பொழுது எம்.ஜி.ஆர். ஏற்றிய ஒளியைப் பிறந்த நாளன்று அணைப்பது தவறு கேக் வெட்டுவது எல்லாம் மேலை நாட்டினர் பழக்கம் நமக்குத் தேவையில்லை. நமது பண்பாடு கோவிலுக்குச் சென்று இறைவனை வேண்டுவோம். இயலாதவர்களுக்கு ஏதாவது கொடுத்து அவர்கள் வாழ்த்தையும், பெரியவர்கள் வாழ்த்தையும் பெற வேண்டும் என்று கண்டித்தார் என குறிப்பிடுகிறார்.

எம்.ஜி.ஆர். அவர்கள் தமது அம்மாவின் நினைவு நாளில் மௌன விரதம் இருப்பாராம். அவருடைய செயினில் இருக்கும் அம்மாவின் படம் பதித்த டொலருக்கு தினமும் சந்தனம் வைத்து அதனை தனது பனியனுள் வைத்துக் கொள்ளுவாராம். கடவுள் மீது ஆழ்ந்த நம்பிக்கை இருந்தாலும் அதனை வெளியே காட்டிக் கொள்ள மாட்டாராம் என்று அவரிடம் பணிபுரிந்த ஜோதி பிரபா சுட்டிக்காட்டுகிறார்.

எம்.ஜி.ஆர். அவர்களின் மனதில் ஆத்மீகச் சிந்தனை இருந்து கொண்டே வந்திருக்கிறது. ஆனால் வெளியே அதனை விளம்பரப்படுத்திட அவர் விரும்பவில்லை என்றே எண்ணமுடிகிறது. இந்த ஆத்மீக பலமே அவரைப் பல இன்னல்களிலும் இருந்து காப்பாற்றியது என்பதையும் மறுப்பதற்கில்லை எனலாம்.

நடிகமணி டி.வி. நாராயணசாமி என்பரே எம்.ஜி.ஆர். அவர்கள் தி.மு.க. சார்பானவராக மாறக்காரணம் என்று சொல்லப்படுவதும் உண்டு. அண்ணா அவர்களோடு நெருங்கவும் தி.மு.க. காரனாக மாறவும் ஆன ஒரு சூழ்நிலைக்கு எம்.ஜி.ஆர். அவர்களுக்கு ஏற்பட்டது.



இதனால் அரசியலிலும், சினிமாவிலும் செல்வாக்கு மிக்கவராக உருவாகத் தொடங்கினார்.

எம்.ஜி.ஆர். அவர்களுக்கு அண்ணா அவர்களிடம் மிகுந்த விருப்பும், மரியாதையும் இருந்தது. தி.மு.கவில் அவர் இணைந்தாலும் தி.மு.கவின் கொள்கைகளில் பூரண ஐக்கியம் இருந்திருக்கிறதா என்பது சந்தேகமே! அவர் மனம் ஆஸ்திகத்தையே நாடி நின்றது எனலாம்.

மதுரையில் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு வளங்கப்பட்ட வெள்ளி வாளை மூகாம்பிகை அம்மனுக்கே வழங்கினார். காஞ்சிப் பெரியவரே எம்.ஜி.ஆரை. இவர் நல்லமனுஷன் என்று சொல்லியிருக்கிறார் என்றால் ஆஸ்த்திகத்தின் செல்வாக்கு எம்.ஜி.ஆர். அவர்களிடம் நிறைந்தே இருந்திருக்கத்தானே வேண்டும்.

முருகபக்தரான திருமுருக வாரியார் சுவாமிகளுக்குதி.மு.க. தொண்டர்களால் தேவையற்ற தொல்லைகள் ஏற்பட்ட வேளை அவரையும் சமாதானம் செய்து அண்ணாவையும் சமாதானம் ஆக்கி வாரியார் சுவாமிகளைக் கொண்டே பொன்மனச் செம்மல் என்னும் பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். எம்.ஜி.ஆர். என்றால் அங்கும் அடியாக இருந்தது ஆஸ்திக வேரே எனலாம். அவரின் அந்த ஆஸ்த்திக நம்பிக்கைதான் அவரை அதியுயர் நிலைக்குக் கொண்டு சென்றிருக்கலாம் என்பது எனது எண்ணக்கிடக்கையாகும்.

தேவருக்கும் எம்.ஜி.ஆர். அவர்களுக்கும் மிகவும் நெருக்கம் என்பது எல்லோருக்கும் தெரிந்த வியமாகும். தான் அரசியலில் பிரவேசித்துக் கட்சி தொடங்குவது, தேர்தலில் நிற்பது பற்றியெல்லாம் எம்.ஜி.ஆர். சொன்ன போது எம்.ஜி.ஆர். நல்லபடி வெற்றி பெற வேண்டுமென்று தேவர் மருதமலை முருகனுக்குக் காணிக்கையும் செலுத்தி அரிச்சனையும் செய்து, விபூதிப்பிரசாதத்துடன் எம்.ஜி.ஆரிடம் வந்து கொடுக்கிறார். எம்.ஜி.ஆரும் தேவர் கொடுத்த பிரசாதத்தை வேண்டாம் என்று சொல்லாமல் அதனை வாங்கிக் கொள்கின்றார். இவையெல்லாம் மக்கள் திலகத்தின் ஆஸ்த்திகத்துக்கு நல்ல எடுத்துக்காட்டுகள் அல்லவா ?

பிராமணரை எதிர்ப்பது என்பது திராவிடக் கட்சிகளின் மிகப்பெரிய பிரசாரமாகும். ஆனால் எம்.ஜி.ஆர். கருத்து சற்று வித்தியாசமானதாகவே காணப்பட்டது. முன்னேறிய ஜாதிகளிலும் ஏழைகள் இருக்கிறார்கள். அவர்களுடைய கஷ்டங்களும் தீரவேண்டும் என்று எம்.ஜி.ஆர். கூறினார். ஆனால் அவரின் கட்சிக்கு இது ஒத்துவராத கொள்கை தான். கடும் எதிர்ப்பு வந்ததும் அதைப்பற்றிப் பேசாமலேயே இருந்துவிட்டார்.

எம்.ஜி.ஆர். ரசிகமன்றத்தையே முதன்முதலாக தோற்றுவிக்கக் காரணமாயிருந்தது யார் என நினைக்கிறீர்கள்? கல்யாணம் என்னும் ஏழைப் பிராமண இளைஞனே !

எம்.ஜி.ஆர். மனத்தில் இவையெல்லாம் பிற்காலத்தில் பலமாற்றங்களுக்கும் சிந்தனைக்கும் வித்திட்டிருக்கலாம் அல்லவா?

ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் எம்.ஜி.ஆர். அவர்கள் படப் பிடிப்போடு நின்று அதில் தீவிரம் காட்டத் தொடங்கினார். திராவிட நாடு பிரிவினையை அண்ணா அவர்கள் கைவிட்ட போது எம்.ஜி.ஆர். அவர்கள் அதனைக் கண்டு கொள்ளவேயில்லை. ஹிந்தி எதிர்ப்புக் காலத்திலும் அவரின் ஈடுபாடு அவ்வளவு இருந்ததாகவும் தெரியவில்லை.

தி.முக. கொள்கைகளைவிட அவர்களது பேச்சாற்றல், நல்ல தமிழ் எழுத்து, அதுமட்டுமல்லாமல் அந்தக்கட்சியில் தனக்குக் கிடைத்த வரவேற்பு, செல்வாக்கு, இவைதான் எம்.ஜி.ஆர். அவர்களைக் கவர்ந்திருந்தது என்பதே உண்மையாகும்.

ஆனால் எதையும் வெளியில் காட்டிக்கொள்ளாமல் தனது செயல்களில் உற்சாகமாக உழைப்பதை மட்டும் விட்டுவிடாமலும் இருந்தார். அவரிடம் சில கொள்கைகள் இருந்தன. அவற்றை அவர் விட்டுக்கொடுக்கவே மாட்டார். அதே வேளை தனக்குப் பிடிக்கவில்லை என்பதற்காக வற்புறுத்தவும் மாட்டார். முன் கோபம் உள்ளவர். ஆனால் பின்னர் சரியான காரணத்தை எடுத்துக் கூறினால் சமாதானம் ஆகியும்விடுவார். சந்தேகமும் அவரிடம் காணப்பட்டதாகப் பலகுறிப்புகள் வாயிலாக அறியமுடிகின்றன. பலம்களும் பல்வீனங்களும்தான் மனித வாழ்க்கை. அதில் இருந்து யாருமே விட்டுவிலகவே முடியாதல்லவா ?

எம்.ஜி.ஆர். படங்களுக்குப் பல வெற்றிப்பாடல்களைக் கொடுத்து எம்.ஜி.ஆர். அவர்களின் அன்புக்கும் நட்புக்கும் பாத்திரமாய் இருந்தவர் கவிஞர் வாலி அவர்கள். அவர் ஸ்ரீரங்கத்துப் பிராமணர். நெற்றியில் விபூதி இல்லாமல் அவர்வருவதே இல்லை. ஒரு படப்பிடிப்பின் போது எம்.ஜி.ஆர். அவர்கள் வாலியிடம் தான் சார்ந்தகட்சியினர் விபூதியணியும் வாலியை எப்படிப் பாட்டெழுத சமமதித்தாய்? எங்கள் கட்சியில் வேறு ஆள்களா இல்லை என்று கேள்விமேல் கேள்வி கேட்கிறார்கள். ஆகையால் இனி வரும்போது விபூதியை இட்டுக் கொள்ளாமல் வந்தால் நல்லது என்று எம்.ஜி.ஆர். வாலியிடம் சொல்ல நேர்ந்தது.

அதற்கு வாலி சொன்னார் – அப்படியா அண்ணா! நல்லது நீங்கள் வேறு பொருத்தமானவரை பார்த்து எழுதச் சொல்லுங்கள் என்று சொல்லிவிட்டு புறப்பட ஆயத்தமானார். ஆனால் பொன்மனச் செம்மல் அவரைச் சமாதானப்படுத்தி உங்கள் விருப்பப்படியே விபூதியுடனே எழுதுங்கள் என்று சொன்னார் என வாலி அவர்களே கூறியிருக்கிறார்கள்.

தனது கருத்தைச் சொன்னார். ஆனால் மற்றவர் வருந்த மக்கள் திலகம் முயலவில்லை. இதனால் வாலியும் அவரும் நீண்டகாலம் கலையுலக நண்பர்களாகவே இருந்ததை யாவரும் அறிவர். எம்.ஜி.ஆர். இயல்பாகவே எந்தக் கெட்டபழக்கமும் இல்லாதவர். ஒழுக்கமாக வாழ்ந்தவர். ஏழ்மையை நன்கு அனுபவித்தவர். வீடு இல்லாமல், படிக்க முடியாமல், பணம் இல்லாமல், ஆதரவு இல்லாமல், வாழ்ந்து வந்தவர். இல்லாமை இல்லாமல் போக வேண்டும். எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும். குடிசைகள் குடியிருக்கும் நல்லமனை ஆகவேண்டும். ஏழைஎன்று சொல்லும் நிலை இருக்கவே கூடாது. கல்வி அனைவருக்கும் கிடைக்கவேண்டும் ,உணவு அனைவருக்கும் கிடைக்க வேண்டும், மடைமை ஒழிந்து மக்கள் விழிப்புப் பெற வேண்டும். என்றெல்லாம் எம்.ஜி.ஆர். மனத்தில் பெரிய கனவு இருந்தது.

அந்தக் கனவுகளை கண்முன்னே கொண்டுவந்து மக்களுக்கு வெளிச்சமாகக் காட்டி அவர்கள் வாழ்க்கையில் நம்பிக்கை ஊட்டவேண்டும் என்றுவிரும்பினார். அதற்கு அவர் கையில் எடுத்த உத்திதான் தமிழ்ச் சினிமா.

எப்படி எப்படி எல்லாம் கனவுகண்டாரோ அப்படியே அதே பாத்திரமாகவே சினிமாவில் எம்.ஜி.ஆர். அவர் தோன்றினார். வெற்றியும் கண்டார். அந்த வெற்றிதான் அவரைத் தமிழ் நாட்டின் முதன்மந்திரி பதவியைத் தேடிக் கொடுத்தது. உயர், மத்தியதர, மக்களை இலக்காகக் கொள்ளாமல் தொழிலாளர்கள், விவசாய மக்கள், கீழ், மத்திய தரத்தினரை தனது இலக்காகக் கொண்டு ஏழைபங்காளனாக, வீரனாக, நீதியை நிலை நாட்டுபவனாக சமதர்மவாதியாக, என்று நல்ல குணமுடைய , யாவரும் விரும்பும் பாத்திரங்களாகத் தேர்ந்தெடுத்து அதற்கு ஏற்ப கதை, வசனம், பாடல்கள், காட்சிகள் அமைத்து எம்.ஜி.ஆர். மக்கள் மனத்தில் குடியேறி நின்றார்.

(11ஆம் பக்கம் பார்க்க)



முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்விழி நயனம்

## நாயன்மார்கள்



உலகில் பல இடங்களிலும் பரந்து வாழும் சைவமக்கள் தங்கள் வாழ்வை எவ்வாறு வளப்படுத்துவது என்பதை தமது வாழ்விலே வாழ்ந்து காட்டிய பெரியவர்கள் நாயன்மார்கள்.

மன் எனும் வினையடியாகத் தோன்றிய மனம் என்ற சொல்லுக்கு நினைத்தல் என்பது பொருள். மனதை உடைய மனிதன் எதோ ஒரு பொருளையோ காட்சியையோ நினைக்கக்கூடிய ஆற்றல் கொண்டவனாகிறான். ஆனால் இறைவனை எப்போதும் நினைத்துக் கொண்டிருக்கும் தன்மை அவனிடம் இல்லை. சைவ நாயன்மார்கள் சிவப்பரம் பொருளோடு இணைபிரியாது வாழ்ந்தனர்.

**உள்ளம் கவர்கள்வன் – சம்பந்தர்.**
**நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன் – அப்பர்.**
**நீள நினைந்தடியேன் உமை நித்தலும் கைதொழுவேன் – சுந்தரர்.**
**இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க – மணிவாசகர்.**
**ஆதலால் அவர்களை நினைப்பதாலும் வணங்குவதாலும் இறைவனை அடைவதற்கோர் வழியாகும்.**
**இறைவரோ தொண்டருள்ளத் தொடுக்கம். தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே – அவ்வை.**

ஒரு மனிதனுக்கு இவ்வுலகில் தேவையானவை மகிழ்ச்சிகரமான வாழ்வும் இன்பமான சமுதாயமுமாகும். அவை சிவபக்தரை ஆலயங்களில் பிரதிஷ்டை செய்வதால் கிடைக்கின்றது.

ஆதலால் இம்மண்மேல் சிவபக்தப்பிரதிஷ்டை செய்து நற்பலனை அடைவதுடன் கணனியும் கைத்தொலைபேசியுமாகத் திரியும் இக்கால சைவ இளைஞர்களுக்கு நாயன்மார்கள் யார் என்பதை கண்கூடாகக் காட்டவும் உதவுகின்றது. இவ்வரிய நற்புண்ணியச் செயலை யாவரும் செய்தால் நாட்டில் சைவ சமயம் தழைத்தோங்கி வளரும் என்பது திண்ணம்.

**சைவப்புலவர் சிவஸ்ரீ**
**பால.இந்திரக்குருக்கள் M.A.**
**(சிட்னி, ஆஸ்திரேலியா)**

## பாதாங்குஸ்தாசனம்



வாரம் ஓர் ஆசனம்

**செய்(படி)முறை :**

1. உடல் ஒரே நேர்கோட்டில் இருக்குமாறு (துடாசனத்தில்) நிற்கவும். (ஆரம்ப நிலை)

2. மூச்சை உள்ளிழுத்துக் கொண்டு இரு கைகளையும் பக்கவாட்டில் தோள் மட்டத்திற்கு மேல் உயர்த்தவும். உள்ளங்கைகள் தரையை நோக்கியதாக இருக்க வேண்டும். பின்னர் கைகள் இரண்டையும் தலைக்கு மேல் உயர்த்தி புயங்களை இரு காதுகளுடன் சேர்த்தவாறு வைக்கவும்.

3 மூச்சை வெளிவிட்டவாறு உடம்பை கிடை மட்டமாக தரைக்கு இணையாக முன்னோக்கி வளைக்கவும். மேலும் மூச்சை வெளிவிட்ட வண்ணம் உடம்பை கீழ் நோக்கி வளைத்து கை விரல்களால் கால் பெரு விரல்களை கொழுவிப் பிடித்தவாறு தலையை நிமிர்த்தியபடி சுவாசிக்க வேண்டும் – அரை நிலை.

4. இதன் உச்சநிலையாக நெற்றியானது முழங்கால்களைத் தொட்டிருக்க சாதாரணமாக சுவாசிக்கவும். (இந்நிலையில் கைகளை மடிக்கலாம். கால்களை மடிக்கலாகாது.)

5. பின்னர் மூச்சை உள்ளிழுத்துக் கொண்டு தலையைக் கைகளோடு சேர்த்தவாறு முதுகெலும்பின் அடிப்பகுதியிலிருந்து தரைக்கு இணையாக உயர்த்தி தொடர்ந்து மூச்சை உள்ளிழுத்தவாறு நிமிர்ந்து நேரான நிலைக்கு வரவும்.

6. மூச்சை வெளிவிட்டுக் கொண்டு இரு கைகளையும் பக்கவாட்டில் தோள்களுக்கு இணையாக இறக்கி ஆரம்ப நிலைக்கு வரவும்.

**குறிப்பு : இதே போல் மூன்று தடவைகள் செய்தால் போதுமானது. இந்த ஆசனமானது பாதகஸ்தாசனம் செய்யும் அதே முறை இதற்கும் பொருந்தும். அரை நிலையில் தலையை நிமிர்த்தியும் முழு நிலையில் முழங்கால்களை நெற்றியினால் முட்டியவாறும் செய்தல் வேண்டும்.**

**பயன்கள் :**

உடம்பின் பின்புறம் உள்ள எல்லா தசைகள், தசை நார்கள், இடுப்பெலும்புகள், மூட்டுகள், தொடை எலும்பு, கால் நரம்புகள் நன்றாக நீட்டப்படுகின்றன. முதுகுத்தண்டுவடம், இடுப்பு எலும்புகள் இறுக்கத்தன்மை குறைந்து முறுக்கேறும். தலைப்பகுதிக்கு ரத்த ஓட்டம் அதிகரிக்கும். ஜீரண உறுப்புக்கள் மற்றும் நாளமில்லாச் சுரப்பிகள் நன்கு வேலை செய்கின்றன. இடுப்புப் பகுதியில் அதிகமாகக் காணப்படும் ஊளைச்சதைகள் மற்றும் தேவையற்ற கொழுப்புக்கள் குறைவடைகின்றன. இரைப்பை, பித்தப்பை கல்லீரல், மண்ணீரல் ஆகியவற்றின் இயக்கம் அதிகரித்து ஜீரண சம்பந்தமான பிரச்சினைகளுக்கு நல்லது. கல்லீரல் அழற்சி, மலச்சிக்கல், நீரிழிவு முதலிய கோளாறுகள் நீங்கும். மூட்டு வலி, நாரி வலி, கழுத்து வலி நீங்கும். பெண்களுக்கான கர்ப்பப்பை மற்றும் சுலகம், சுலக குழாய்களது இயக்கத்தை மேம்படுத்துகிறது. பியுட்டறி தைரொயிட் மற்றும் பராதைரொயிட் சுரப்பிகளின் செயற்றிறனை அதிகரிக்கச்செய்து அவை சார்ந்த நோய்களை இல்லாமற்செய்கிறது.

**- ஸ்ரீ. நதிபரன் -**
**(யோகா போதனாசிரியர், நல்லூர் திவ்ய ஜீவன சங்கம்)**

## இன்ன துயிலுதியோ ....



துயில் கலைந்து அழகாய் எழுவோம்!

திருவெம்பாவை, அதிகாலையிலேயே ஊரெலாம் விழித்துக்கொள்ளும் காலம். விழிக்காதவர்களையும் சேமக்கல ஒலியுடன் 'இன்ன துயிலுதியோ' எனப்பாடி எழுப்புகின்ற அழகான எங்கள் பண்பாட்டு ஏற்பாடு திருவெம்பாவை. இந்த ஆன்மீக பண்பாட்டு ஏற்பாட்டின் பின்னணியில் எம் முன்னோரின் அறிவியல் பார்வை அமைந்த வண்ணம் பெருமிதம் தரும் ஒன்றாகும்.

மார்கழி மாதத்தின் அதிகாலை வேளை ஓசோன் நிரம்பிய சுகமான சூழல் என்பது அறிவியல். சுவாசத்தின் போது ஓசோன் வாயு நுரையீரலுக்குத் தரும் புத்துணர்ச்சி அருமருந்தானது.

அதிகாலையிலே வாசலிலே மாக்கோலமிடும் வழமையும் மார்கழி மாதத்தின் இந்த சூழமைவிலேயே தொடங்கியுள்ளது. உடலோடு உள்ளத்து மேம்பாடுக்கும் உரம் சேர்க்கும் கோலமிடுதல். புள்ளிகளை இணைத்து கோலமிடும் போது மன ஒருமைப்பாடு மேம்படுகின்றது. சிந்திக்கும் திறனுக்கும் காலுகின்றது என்பது இன்றைய ஆய்வுகள் முன்வைக்கும் உண்மையாகும். இதற்கு அப்பால் அரிசிமாக் கோலம் எங்கள் சூழமைவின் எறும்புகளுக்கான குளிர்கால உணவாகவும் அமைகின்றமை குறிப்பிடத்தக்கது, வாயிலிலேயே உணவு வாய்த்து விடுவதால் அவை வீட்டுக்குள் வந்து தொல்லைகளாவதில்லை.

தெய்வத்தின் பெயரால் எங்களை எழுப்பி சுகனுபவத்தை தரும் இது போன்ற பண்பாட்டின் மேன்மைகளை உணராது இன்னமும் நீளத்தூங்குதலும், ஊரெலாம் கூடி எழுப்பும் திருவெம்பாவை அனுபவ உயிர்ப்பு அருகிப்போனதும் கவலை தருவன. அவ்வாறே கலர்க் கோலங்களும் ஸ்ரிக்கர் ஒடுக்கோல 'ரசனைகளும்' கோலமறியாத கோலங்களும் காலத்தின் கோலங்களாகும். துயில் கலைந்து எழுவோம்! எங்கள் பண்பாட்டு அழகின் கோலங்களாய் துலங்குவோம்!!

**- பேராசிரியர் நாகலிங்கம் சண்முகலிங்கன் -**

## நல்லைக் கந்தன் கழற்கோர் கவிமாலை



தானதன தான தன்ன தானதன தான தன்ன
தானதன தான தன்ன -- தனதான
அரிவைய ரிருவோ ரிருபுறம் வரவே
அருநிதி தனையீ -கதிர்வேலா
அபயம தளிவே லொடுமயி லதிலே
அவனியை வலமா -வருவோனே
கரிசனை யொடுதாள் கதியென தொழவே
கழுபிணி யடையா -தருளீசா
கருதிடு தமிழால் பெருவரு ளதைவார்
கழலது தொழவே -பெறுவோனோ
திரிபுர மதுவே எரிசெயு சிவனா
ரளியறு கனலா -லுதிதேவே
திசையது தெரியா தலைவுறு மடியார்
திருவருள் பெறுமா -றருளாயோ?
வரிசைகள் தருவார் விரியுமு னருளால்
வகையுறு பெருபே -றருள்வோனே
வளமது நிறைவா யருளிடு முருகா
வதியுநல் லையையாள் -பெருமானே!

**- கவிஞர் குகதாசன் -**

# கொழும்புக் கூட்டம் கூறும் செய்தி என்ன?



என்.சத்தியமூர்த்தி

அக்கரை அக்கறை அலசல்



ரெலோத் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் வகையாறாக்கள் தங்களைத் தாங்களே பாராட்டிக் கொள்ளலாம். எப்போதும் போல் அல்லாமல், அவர்கள் பிள்ளையார் பிடிக்கப் போய், அது பிள்ளையாராகவே உருவெடுத்துள்ளது. முன்னாள் வடக்கு மாகாண முதல்வர் விக்னேஸ்வரனே, பதின்மூன்றாவது திருத்தம் குறித்து கடந்து சில காலமாக பேசி வந்துள்ளார். தலைநகர் கொழும்பில் நடந்தேறிய பல்வேறு தமிழ் பேசும் அரசியல் தலைவர்களின் பேச்சுகளின் வெற்றிக்கு அடிக்கோலிட்டவர்கள் இவர்கள் இருவருமே.

இதற்கு எதிரிடையாக, ஸ்ரீகாந்தா போன்றோர், வழக்கமான தங்களது எதிர்மறை சொல்லாடல்களை தவிர்த்து, தக்க சமயத்தில் ரெலோவின் இந்த முயற்சியில் தங்களை இணைத்துக் கொண்டுள்ளனர். வரவேற்கத்தக்கது. இன்னமும், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் போன்றோர், இத்தகைய ஒருங்கிணைந்த முயற்சிகளை ஏற்றுக் கொள்ளாமல், வெளியிலேயே இருக்கிறார்கள். அவர்களுக்கு அடிப்படை கொள்கை சார்ந்த வேறுபாடுகள் உள்ளன. கஜேந்திரகுமாரைப் பொறுத்தவரை, ஒற்றையாட்சி முறையின் கீழான அரசியல் தீர்வை ஏற்றுக்கொள்ள தயாரில்லை. ஆனால், தென்னிலங் கையிடமிருந்து அரசியல் தீர்வு ஒன்றை பெற வேண்டுமானால், அதற்கு அனைத்து தமிழ் குரல்க ளும் ஒருங்கிணைந்தாலே ஏதா வது வழி ஏற்படலாம். ஏற்படாமலும் போகலாம். ஆனால், தனி ஆவர்த்தனம் வாசிப்பதால் சாதிப் பது ஒன்றுமில்லை.

அந்த வகையில், தமிழ் பேசும் முஸ்லிம் தலைமைகளின் ரவூப் ஹக்கீமும் மற்றும் மலையகத் தமிழர்களை முன்னிறுத்தும் மனோ கணேசனும், வட - கிழக்கு தமிழர் அரசியல் தலைமைகளை ஒன்று சேர்க்க சிறந்த பங்காற்றி உள்ளனர். அவர்களோடு ரிஷாத் பதியுதீனைக் காலம் தாழ்த்தியாவது தமிழர் தரப்பு பேச்சுகளின் ஏற்பாட்டாளர்கள் ஏற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

அது போன்றே. திடீரென விழித்துக்கொண்ட மனோ கணேசன் தனது கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்களான திகாம்பரம் போன்றோர், அண்மையில் கொழும்பில் நடந்த மூன்றாவது கூட்டத்தில் பங்குபெற வழி செய்திருந்தார் எனலாம். ஆனால், விக்னேஸ்வரன் தலைமையிலான கூட்டணியில் பங்கு வகிக்கும் அனந்தி சசிதரன் போன்றோர், முன்னாள் நீதியரசர் தங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை என்று கூறியுள்ளனர். அவர் ஒப்புதல் அளித்ததாக கருதப்படும், கூட்ட முடிவுகளையும் எதிர்த்துள்ளனர். இப்பொழுது அந்தக் கூட்டணியின் எதிர்காலம் கேள்விக்குறி ஆகியுள்ளது.

ஆனால், உண்மை இது தான். வட - கிழக்கு தமிழ் தலைமைகளுக்கு அவர்கள் ஒரே அறையில் கூடி பேசுவதற்கு கூட பிறர் முன்னிலைப்படுத்தப்பட வேண்டிய சூழலே இன்றளவும் நிலவுகிறது. அதிலும் குறிப்பாக நட்பு நாடான இந்தியா சார்ந்த பதின்மூன்றாவது திருத்தம் குறித்தே அந்த பேச்சுகள் இருந்திரா விட்டால், அனைத்துத் தரப்பினரும் பங்கேற்றிருப்பார்களா, என்பதே இன்னமும் கேள்விக்குறிதான்.

### வெற்றி -தோல்வி

இந்த பேச்சுகளில் முடிவில் வெற்றி - தோல்வி யாருக்கு? என்ற கேள்வி எழுந்தால், அது அனைத்து தமிழ் பேசும் தரப்பினருக்கும் என்று கூற லாம். ஆனால், அந்த உண்மை எதிர்வரும் மாதங்க ளில், காலங்களில், நிரூபிக்கப்பட வேண்டிய விடயம். இடைப்பட்ட காலத்தில், இதனால் முன்னிலைப்படுத்தப்பட்டது, தமிழர் பிரச்சினைகளோ அவற்றின் முடிவிற்கான சாத்தியக்கூறுகளோ அல்ல. மாறாக, பிளவுபட்ட, வலிமை இழந்த தமிழர் அரசியல் தரப்புகளின் ஏற்கப்படகூடிய தலைமை, இன்னமும் தமிழரசுக் கட்சியை சார்ந்தே உள்ளது என்பதையே, இந்த முன்னெடுப்புகள் மீண்டும் ஒரு முறை நிரூபித்துள்ளன.

இது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளாவது, தமிழரசுக் கட்சிக்கான இடத்தை மீண்டும உறுதி செய்துள்ளது. கூட்டணிக்குள்ளேயே, தமிழரசுக் கட்சியின் தலைமைப் பொறுப்பிற்கு எதிரான முன்னெடுப்புகளுக்கு 'பிரேக்' போட்டுள்ளது. குறிப்பாக, இந்த பிரச்சினை காரணமாக, முரணாக செயல்பட்டு வந்த தமிழரசு கட்சியின் பல்வேறு தரப்புகளும் ஒன்றாக இணைந்து தங்கள் கட்சியை முன்னிலைப்படுத்தும் முயற்சியில் ஒன்றுபட்டுள்ளன. இந்த ஒற்றுமை தொடருமா? என்பதும் பெரிய கேள்விக் குறியே.

தமிழர் பேச்சு என்று யாழ்ப்பாணத்தில் நடந்தேறிய முதல் நிகழ்வில், வட - கிழக்கின் முக்கிய அரசியல் கட்சியான தமிழரசு பங்குபற்றவே இல்லை. கூட்டமைப்பின் தலைவர் என்ற நிலையில் சம்பந்தன் அழைக்கப்பட்டும் அவர் அதில் பங்குபெறாதமைக்கு அவரது உடல்நிலை மட்டுமே காரணமல்ல என்பதை யாழில் சிறு பிள்ளை கூட அறியும். அந்த கூட்டம் அந்தோ கூட்டம் ஆகிவிடக்கூடாது என்ற ஒரே காரணத்திற்காகதான், ரவூப் ஹக்கீம் மற்றும் மனோ கணேசன் அழைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் கேட்டுக் கொண்ட பிறகு, அதுவும் அவர் வசிக்கும் தலைநகரில் அடுத்த சுற்றுப் பேச்சு என்று முடிவான பிறகு, சம்பந்தனால் தட்ட முடியவில்லை.

மேலும், இத்தகைய முயற்சிகளை முளையிலேயே கிள்ளியெறிய வேண்டிய அரசியல் அவசியங்களும் அவருக்கு இருந்தன. இதில், அவர் சார்ந்த தமிழரசு கட்சியின் தலைமைத்துவம் குறித்த கவலைகள் மட்டுமல்ல, தமிழர் அரசியல் மீண்டும் ஒரு முறை உடைந்து சிதறும் அபாயத்தையும் தடுக்க வேண்டிய கடமையும் அவருக்கு இருந்தது எனலாம். முடிவில், சம்பந்தனின் அரசியல் அனுபவம் சார்ந்த சாணக்கியம் வென்றது எனலாம்.

எந்தவிதத்தில் நோக்கினாலும், இந்த முயற்சியின்



பின்னால், தமிழர் எதிர்கால நலனுக்கு அப்பாலான அரசியலே இருந்தது. ஒன்று, எப்போது நடைபெறுமோ என்று அறியாத மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர், தமிழர் அரசியலில், அதிலும் குறிப்பாக கூட்டமைப்பினுள், தமிழரசு கட்சியின் ஏகபோக முதலாளித்துவ மனோ நிலையை எதிர்ப்பது அல்லது கட்டுக்குள் கொண்டு வருவது. இனப்போர் முடிவுற்ற காலம் முதல், ஒவ்வொரு தேர்தலுக்கு முன்னரும் தமிழரசு கட்சியின் கூட்டமைப்பு பங்காளர்களால் இவ்வாறான முயற்சிகள் முன்னெடுக்கப்படுவது வழக்கமான ஒன்றாகி விட்டது. முடிவில், தாங்கள் எதிர்பார்த்த விதத்தில், தொகுதி பங்கீடுகளை பெற்றுக்கொண்டு அவர்கள் வாயடைத்துக் கொள்வதும் தமிழ் வாக்களர்களுக்குப் புதிதல்ல.

ஆனால், இந்த முறை அத்தகைய முயற்சி, புதியதொரு வடிவம் பெற்றது. மெச்சத்தகுந்த ஒரிஜினல் ஐடியா. ஆனால், சம்பந்தனின் அடுப்படியில், அந்த பருப்பும் வேகவில்லை என்பதே நிதர்சனம். இதனால். சாதக - பாதகங்கள் யாருக்கு என்பது, எப்போதாவது மாகாண சபைத் தேர்தல் நடந்தாலே தெரிய வரும்.

போர்வை, தமிழரசு கட்சியின் தலைமைக்கு சவால் விடுவதாக இருந்தாலும் உண்மையான குறி என்னவோ சுமந்திரன்தான். இது, தானே என்று வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டு, தமிழர் தரப்பிற்காகவும் வாதாடி, தனது தொழிலை நிலைநிறுத்திக் கொண்டிருந்த சுமந்திரனை, தமிழர் அரசியலுக்கு, சம்பந்தன் அறிமுகப்படுத்திய காலம் முதல் தொடரும் பிரச்சினை. எங்கே சுமந்திரனை வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராக சம்பந்தன் முன்னிறுத்திவிடுவாரோ என்று கவலைப்பட்டுக் காரியமாற்றிய பலரும் இன்றளவும், தமிழரசுக் கட்சி மற்றும் கூட்டமைப்பின் தலைமைகளில் உள்ளனர்.

இதன் காரணமாகவும், அவர்களில் பலரும் சுமந்திரனை போலவே இனப்போர் காலத்திலும் அதற்கு முன்னரும் தமிழர் அரசியலில் நேரடி பங்கு வகிக்காத விக்னேஸ்வரனை முதல்வராக சம்பந்தன் முன்னிறுத்திய போது, அவர்கள் இருகரம் தட்டி வரவேற்றனர். அதனைத் தொடர்ந்து அவர்களில் பலரது தமிழர் அரசியல் சதுரங்க வேட்டையும் சுமந்திரனை மட்டம் தட்டுவதும், ஓரம் கட்டுவதுமான முயற்சிகளாகவே அமைந்து வந்துள்ளன.

அதனையே தற்போதும் அரங்கேற்றுவதற்கான முயற்சியாகவும் அனைத்து தமிழ் பேசும் தலைவர்களின் கூட்டமும் பார்க்கப்பட்டது. ஆனால் நடந்தது என்ன? எதிர்பார்த்தபடியே, தமிழரசுக் கட்சியின் தலைவரான மாவை சேனாதிராஜா இல்லாத கூட்டத்திற்கு தான் இல்லை என்று அவர் தெளிவுபடுத்தினார். இன்னமும் அந்த கட்சியின் உறுப்பினர் என்ற முறையில் சம்பந்தனின் இந்த முடிவே சரியான நெறிமுறையும் கூட. செல்வம் அடைக்கலநாதனைப் போலவே, தானும் சுமந்திரனை தனது உதவியாளராகவோ பேச்சாளராகவோ, கடைசியாக நடைபெற்ற மூன்றாவது பேச்சுகளுக்கு அழைத்துச் சென்றார்.



முடிவில், புதிய தீர்மானங்களை வரையறுத்து, வரைவு செய்யும் குழுவிற்கும் சுமந்திரனே தலைமையேற்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில், இதனை, நடக்காத போரில், பங்குபெறாத சுமந்திரனுக்கு, எதிர்பாராதவிதமாக கிடைத்த அரசியல் வெற்றி என்றே கருதவேண்டும். அவரை மட்டம் தட்டி, பின்னர் ஓரம் கட்ட நினைத்த பிரகஸ்பதிகளுக்கு, இது சாட்டையடியா, அல்லது சம்மட்டி அடியா என்பது தான் தெரியவில்லை.

(12ஆம் பக்கம் பார்க்க)

# ஒருவேளை உணவைக்கூட பெறமுடியாத அவல நிலையில் நாட்டு மக்கள் உள்ளனர்

## பேராசிரியர் திஸ்ஸ விதாரண வேதனை

பொருளாதாரப் பாதிப்பை எதிர்கொண்டுள்ள பொது மக்களுக்கு நிவாரணம் வழங்க அரசாங்கம் உரிய திட்டங்களை முன்னெடுக்காமலிருப்பது கவலைக்குரியது. ஒருவேளை உணவைக்கூட பெற்றுக்கொள்ள முடியாத அவல நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள். குளிர் அறையில் இருந்து கொண்டு எடுக்கும் தீர்மானங்கள் அனைத்தும் நடைமுறைக்கு பொருத்தமானவையாக அமையா என லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றம் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில் -

கொவிட் தாக்கத்தாலும், அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றத்தாலும் பொது மக்கள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளார்கள். 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் அமையவில்லை.

செல்வந்த தரப்பினரிடமிருந்து வரி அறவிடலை அதிகரித்து, அதனூடாக நடுத்தர மக்களுக்குக் கூப்பன் முறையின் பிரகாரம் நிவாரணம் வழங்குமாறு நிதியமைச்சரிடம் கோரிக்கை முன்வைத்தோம். எமது ஆலோசனைகளுக்கும், கருத்துக்களுக்கும் மதிப்பளிக்கப்படவில்லை.

பொருளாதாரப் பாதிப்பை எதிர்கொண்டுள்ள பொது மக்களுக்கு நிவாரணம் வழங்க அரசாங்கம் உரிய திட்டங்களை இதுவரை முன்னெடுக்காமலிருக்கின்றமை கவலைக்குரியது. பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் பெரும்பாலானோர் ஒரு வேளை உணவைக்கூட பெற்றுக்கொள்ள முடியாத அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

ஆடம்பரமான உட்கட்டமைப்பு அபிவிருத்திப் பணிகளை சற்று தாமதப்படுத்தி மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நடவடிக்கையை முன்னெடுப்பது தொடர்பில் அவதானம் செலுத்துமாறு பிரதமரிடம் பலமுறை வலியுறுத்தியுள்ளேன். இருப்பினும் எமது யோசனைகள் செயற்படுத்தப்படவில்லை.

அத்தியாவசிய உணவுப் பொருள்களை பெற்றுக்கொள்வதில் மக்கள் பெரும் நெருக்கடிகளை தற்போது எதிர்கொள்கிறார்கள். பிள்ளைகளுக்குச் சத்துணவு கிடைக்கப் பெறுவதில்லை. 5 பிள்ளைகளில் ஒரு பிள்ளை போசாக்கு குறைபாட்டால் பாதிப்படைந்துள்ளது. இந்தக் காலப்பகுதியில் மாத்திரம் போசாக்கு குறைபாடு 18 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. குளிர் அறையில் இருந்து கொண்டு முன்னெடுக்கப்படும் தீர்மானங்கள் அனைத்தும் நடைமுறைக்கு சாத்தியமற்றனவாக அமையும். அத்தியாவசியப் பொருள்களின் இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்டதன் விளைவை நடுத்தர மக்கள் தற்போது எதிர்கொண்டுள்ளார்கள். - என்றார்.

# மக்கள் மனத்தில் ...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

எம்.ஜி.ஆர். அவர்களின் படங்களில் சமூகத்தளைகளை மீறி தனிமனித மேல்நிலைப்பாட்டை எய்தமுடியும் என்ற கருத்து மிகச் செப்பமாகப் பதியவைக்கப் பெற்றது. அவர் சித்திரித்த பாத்திரங்களின் குணாம்சங்களைக் கொண்ட ஒருவரகவே அவர் போற்றப்பட்டார்.

இதனால் தமிழ்நாட்டின் நடுமட்டத்திற்குக் கீழ்வந்த சமூகப்படிநிலையினர் இடையே அவர் ஒரு புருஷராகவே போற்றப்பட்டார். தம் நிலையிலுள்ள ஒருவர் மேல்நிலை அடைந்ததாகவே அவர் உயர்ச்சியையும் புகழையும் அச் சமூக மட்டங்களைச் சேர்ந்தோர் நம்பினார்கள்.

இதனால் தன்னம்பிக்கையும், சுயவளர்ச்சி பற்றிய பிரக்ஞையும் உள்ள ஓர் இளைஞர் குழாம் தமிழ் நாட்டில் வளரத்தொடங்கியது எனலாம். எம்.ஜி.ஆர். தனது கவர்ச்சியின் தளமாக தமிழ் பற்றிய நிலைப்பாட்டினைக் கொள்ளவில்லை. இன்றும்கூட கலைஞர் கருணாநிதியோடு தொடர்புறுத்தப்படும் தமிழ்த்தன்மை எம்.ஜி.ஆர். அவர்களோடு பொருத்திப் பார்க்கப்படுவதில்லை. எம்.ஜி.ஆர். அவர்களுடைய அறைகூவல் நல்ல நேர்மையான மனிதனாக வரவேண்டும் என்பது பற்றியதாகாவே காணப்பட்டது.

இன்று எம்.ஜி.ஆர். அவர்கள் இல்லாத நிலையிற்கூட நினைத்துப் பார்க்கும்பொழுது அவரின் தொடர்பாற்றல் திறனால் அவர் தன்னைப் பற்றிய மதிப்பீட்டினை உயர்த்துவதற்கு ஏற்றவகையில் நடந்துகொண்ட ஒருவர் என்ற எண்ணமே மேலோங்கி நிற்கிறது எனலாம்.

எம்.ஜி.ஆர். அவர்களை உண்மையில் திராவிட இயக்கச் சினிமாத்துறைச் செயற்பாட்டுச் சாதனைகளிலிருந்து நோக்காது அதனைத் தளமாகக் கொண்டு வளர்ந்து தனக்கென ஓரிடத்தினை வகுத்துக் கொண்டார் என்றே கூறல் வேண்டும். மேலும் அண்ணா, கலைஞர் ஏற்படுத்திய தாக்கத்திலிருந்து வேறுபட்ட ஒரு சமூகத்தாக்கத்தையே இவர் ஏற்படுத்தினார் என்றே கொள்ளல் வேண்டும்.

அண்ணாவின் பாசறையில் வளர்ந்தாலும் எம்.ஜி. ஆர். அவர்கள் அண்ணாவிடம் இருந்த நல்லகுணாங்களையே எடுத்துக்கொண்டார். தனக்கென உள்ளவற்றைப் பறிகொடுக்கவிரும்பவில்லை. சரியெனப் பட்டதை சமயத்தில் வெளிப்படுத்தித் தன்னுடைய தனியியல்பையும் அவர் வெளிப்படுத்தத் தவறியதும் இல்லை. எம்.ஜி.ஆர். அவர்கள் எம்.ஜி.ஆர். ஆகவே இருக்க விரும்புகிறார் என்பதை பேரறிஞர் அண்ணாவும் அறிந்து வைந்திருந்தார் என்றுதான் சொல்ல வேண்டும்.

நீதியை, நியாயத்தை, விட்டுவிட எம்.ஜி.ஆர். விரும்பவில்லை. நீதியும் நியாயமும் எடுபடா நிலையில்த் தான் அவருக்கும் ஏனையோருக்கும் கருத்து மோதல் வந்து பிரியும் நிலை ஏற்பட்டது. அந்த நேர்மைதான் அவரை மக்கள் மனத்தில் என்றும் 'மக்கள் திலகம்' ஆக்கியது.

தமிழ்ச் சினிமாவில், அரசியலில், தனிப்பட்ட நடைமுறையில் எல்லாம் எம்.ஜி.ஆர். அவர்களை ஒரு கால புருஷர் என்றுதான் சொல்ல வேண்டும். நல்ல நண்பனாக இருந்துள்ளார் நல்ல நடிகனாக இருந்துள்ளார். சிறந்த கொடைவள்ளலாக விளங்கியுள்ளார். கடின உழைப்பாளியாகவும் இருந்துள்ளார். சிறந்த தொண்டனாகவும் இருந்துள்ளார். அதேவேளை நல்ல அரசியல் ஆட்சியாளனாகவும் விளங்கியுள்ளார்.

எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிப்பொறுப்பு ஏற்றவேளையில் பல அருமையான பணிகளை எல்லாம் ஆற்றியிருக்கின்றார். இலவசங்கள் பலவற்றை ஈந்து எல்லோர் மனங்களிலும் மன்னாதி மன்னனானார்.

மதுவிலக்கை 1984இல் அமுலுக்குக் கொண்டுவந்தார். தமிழர் அல்லாதவர் எம்.ஜி.ஆர். என்றும் அவர் ஒரு மலையாளி என்றும் பிரசாரம் செய்யப்பட்டாலும் அது உண்மையல்ல என்பது பின் கண்டறியப்பட்டது. எம்.ஜி.ஆர். அவர்களது காலத்திலேதான் தஞ்சையில் தமிழ்ப்பல்கலைக்கழகம் உருவாக்கம் நிகழ்ந்தது. எம்.ஜி.ஆர். அவர்கள் தனது சினிமாவில் எதையெல்லாம் காணவிளைந்தாரே அவற்றை நிறைவேற்றவே எண்ணம் கொண்டு உழைத்தார்.

அவர் பட்டப்படிப்புப் படித்தவர் அல்ல. ஆனால் எல்லோரும் படிக்க வேண்டும் என்று கனவும் கண்டார். அதற்கான வழிவகைகளை தன் ஆட்சியிலும் ஏற்படுதிக்கொடுத்தார். அவரின் உதவியினால் படித்து முன்னேறியவர்கள் பலபேர். அவர்கள் எல்லாம் அவரை இன்றும் தெய்வமாகவே போற்றுகின்றனர்.

அவரின் உயர்வுக்கும் பெருமைக்கும் காரணம் அவரது வள்ளல் தன்மை என்பதை எவருமே ஏற்றுக் கொள்ளுவார்கள். கலைஞர் அவர்கள் தனது குடும்பத்தைப் பார்ப்பார். எம்.ஜி.ஆர். அவர்கள் மற்றவர்களுக்குக் கொடுப்பதையே நினைப்பார். தனக்கென எதையுமே சேர்த்துவைக்கும் நிலை எம்.ஜி.ஆர். அவர்களிடம் இருக்கவில்லை. அவரது கைகள் கொடுத்துக் கொடுத்துச் சிவந்த கைகள். கலியுகக் கர்ணன் என்றால் அது எம்.ஜி.ஆர். அவர்களுக்கு மிகப்பொருந்தும் எனலாம்.

படமுதலாளிகள், பட இயக்குநர்கள், சகநடிகர்கள், படத்தொழிலாளர்கள், உதவியென நாடிவருபவர்கள் யாவருக்கும் வளங்கிய வள்ளலாக எம்.ஜி.ஆர். அவர்கள் விளங்கினார். அப்படி ஒருவரை இன்று காண்பது அரிது என்பதை அனைவருமே ஏற்றுக் கொள்வர்கள்.

ஈழத்தமிழரைக் காப்பாற்ற தன்னால் இயன்றரை அதாவது உயிரிருக்கும்வரை எண்ணியவர் எம்.ஜி.ஆர். அவர்கள். பிரபாகரனை தனது மகனாக எண்ணி கோடி கோடியாக தனது சொந்தப் பணத்தைக் கொடுத்த கொடை வள்ளல் எம்.ஜி.ஆர். அவர்கள். தமிழ் இனம் தலை நிமிர்ந்து வாழ மனத்தாலே ஆசைப்பட்டவர் மகோன்னத மாமனிதர் மக்கள்திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள். அவரின்பிரிவால்தமிழ்நாட்டுமக்கள்தத்தளித்தை விடப் பலமடங்கு புலம்பிப் புரண்டவர்கள் ஈழத்துத் தமிழர்கள் ஆவர். அந்த அளவுக்கு மக்கள் திலகம் ஈழத்துத் தமிழர்களின் இதயதெய்வமாக விளங்கினார்.

இருந்தாலும் மறைந்தாலும் பேர் சொல்ல வேண்டும் இவர்போல யாரென்று ஊர் சொல்ல வேண்டும் இது எம்.ஜி.ஆர். அவர்களைத்தவிர வேறு எவருக்குமே பொருத்தமாக இருக்காது என்று கருதுகின்றேன்.

நான் ஆணையிட்டால் அது நடந்துவிட்டால் - இங்கு ஏழைகள் வேதனைப் படமாட்டார்- என்று படத்தில் பாடி நடித்ததோடு நில்லாமல் அதனை நிதர்சனமாக நடத்திக் காட்டியவர்தான் எம்.ஜி.ஆர். என்னும் இமயம். அதுமட்டுமல்ல நினைத்தை நடத்தியே முடிப்பவன் நான்! நான் ! நான் ! என்று துணிவுடன் மூன்று முறை நான் என்பதை உச்சரிக்கும் துணிவு எம்.ஜி.ஆர். அவர்களைவிட யாருக்கு வரமுடியும் ?

குண்டடிபட்டாலும், கால்முறிவு ஏற்பட்டாலும் கடசிவரை நடிப்பையும் விடவில்லை. நல்லகுணத்தையும் விடவில்லை. நாட்டையும் மறக்கவில்லை. நான் செத்துப் பிழைச்சவன்டா என்று பட்ட துன்பங்களையெல்லாம் ஒரு பக்கமாக வைத்துவிட்டு' உழைக்கும் கைகளே உருவாக்கும் கைகளே என்று எம்மையெல்லாம் உற்சாகப்படுத்தி நாளை நமதே இந்த நாளும் நமதே என்று ஆறுதல் கூறிவிட்டு எல்லோர் மனங்களில்அமர்ந்திருக்கிறார் மக்கள் திலகம் எம்.ஜி. ஆர். அவரை நாம் 'நாடோடி மன்னனாகவும் கண்டோம்' சக்கரவர்த்தித் திருமகனாகவும் பார்த்தோம் ஆயிரத்தில் ஒருவனாகவும் அவரே தான் இருக்கிறார்' அந்த இதயக் கனியை மறக்கத்தான் முடியுமா ? அவர் தான் மன்னாதி மன்னன் ஆகி மக்கள் மனதை இன்றும் ஆண்டு கொண்டு இருக்கிறார்!

# தமிழ் பேசும் கட்சிகளின் ஒன்றிணைந்த கூட்டத்தில் அழைப்பு விடுத்தால் இ.தொ.காவும் பங்குபற்றுமாம்!

## ஜீவன் பகிரங்கமாகத் தெரிவிப்பு

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு அழைப்பு விடுக்கப்படும் பட்சத்தில், தமிழ்பேசும் கட்சிகளின் ஒன்றிணைந்த கூட்டத்தில் அது நிச்சயம் பங்கேற்கும் என்று இ.தொ.காவின் பொதுச்செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

கொட்டகலை சி.எல்.எவ். வளாகத்தில் நேற்று (வியாழக்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது, "தமிழ் பேசும் கட்சிகளின் கூட்டத்தில் பங்குபற்றுவதற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு அழைப்பு விடுக்கப்பட்டதா" என எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் ஜீவன் தொண்டமான் மேலும் கூறியவை வருமாறு -

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு இன்னும் அழைப்பு விடுக்கப்படவில்லை. அதற்கு அரசியலும் காரணமாக இருக்கலாம். சம்பந்தன் ஐயா மூத்த அரசியல் வாதி. அவரை நாம் மதிக்கின்றோம். மறைந்த தலைவர் அமரர் ஆறுமுகன் தொண்டமான் காலத்திலும் எமக்குத் தொடர்பு இருந்தது.

எமக்கு அழைப்பு விடுக்கப்படும் பட்சத்தில் அந்த வேலைத்திட்டத்தில் பொதுநலன் இருப்பின் பங்கேற்போம். எமக்கு அழைப்பு விடுக்கப்படாவிட்டாலும்கூட எல்லோரும் ஓரணியில் இணைந்துள்ளமை மகிழ்ச்சி. - என்றார்.

# எரிவாயு நிறுவனங்களை மூடி விடவும் நேரிடலாம்!

## அமைச்சர் லசந்த அழகியவன்ன எச்சரிக்கை

எரிவாயு நிறுவனங்களை மூடி விட நேரிடும் என நுகர்வோர் விவகார அமைச்சர் லசந்த அழகியவண்ண எச்சரிக்கை விடுத்துள்ளார். தேவை ஏற்பட்டால் நிறுவனங்களை மூடி விடவும் தயங்கப் போவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடு முழுவதிலும் எரிவாயு வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகி வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

வாடிக்கையாளர்களின் பாதுகாப்பை உறுதிப் படுத்தாது மெத்தனப் போக்கில் எரிவாயு நிறுவனங்கள் செயற்பட்டால் அவற்றை மூடுவதற்குப் பின்நிற்கப் போவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எரிவாயு வெடிப்புச் சம்பவங்களைத் தடுக்கும் நோக்கில் நீண்ட கால அடிப்படையிலான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் எதிர்வரும் மூன்று மாதங்களில் இந்த நடவடிக்கைகள் அமுல்படுத்தப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எரிவாயு வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடத்துமாறு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழுவால் எரிவாயு சேர்மானத்தில் பிரச்சினை காணப்படுவதாக அறிக்கை வெளியிட்டுள்ள நிலையில், அமைச்சர் இவ்வாறு ஆங்கில ஊடகமொன்றுக்குக் கருத்து வெளியிட்டுள்ளார்.

# கொழும்புக் கூட்டம் ....

**(10ஆம் பக்கத் தொடர்ச்சி)**

**பதின்மூன்றிற்கு அப்பால்**

கடந்த கூட்ட முடிவில் எடுக்கப்பட்ட முடிவுகளை ஒட்டித் தயாரிக்கப்படும் அறிக்கையின் வீச்சத்தின் நீளமும் அகலமும் தெரிவதற்கு கால அவகாசம் தேவை. ஆனால், சமகால நிலைமை என்று எடுத்துக் கொண்டால், அரசு புதிய யாப்பின் வரைவை விரைவில் அறிமுகப்படுத்தப் போகிறோம் என்று மார்தட்டிக் கொண்டிருக்கும் வேளையில், அதிகாரப் பரவல் உள்ளிட்ட அரசியல் தீர்வு குறித்த தமிழர் தரப்பினரின் அறிக்கை எதுவாயினும், அது காலம் தாழ்ந்த ஒன்று. அல்லது, காலத்திற்கு முந்தையது.

இத்தனை காலம் காத்திருந்தவர்கள், அரசு அறிக்கை வரும் வரையில் காத்திருந்தால், காத்திரமான பதிலை அளித்திருக்க முடியும். எது எப்படியோ, அரசு அறிக்கை, அறிவித்தது போல் அடுத்த நாள்களில் அல்லது வாரங்களில் வெளியிடப்படுமேயானால், அதற்கான தமிழர் தரப்பின் பதில், தற்போதைய முடிவுகளை இல்லாதாக்கி விடலாம். செயலிழக்கச் செய்யலாம்.

ஆனால், அரசு கூறியது போல, வருட கடைசிக்குள், வரைவு யாப்பு வெளியிடப்படுமா என்பது இன்னமும் சந்தேகமே. அவ்வாறானால், அதுவரையிலாவது, தற்போதைய முடிவுகளுக்கு உயிர் இருக்கும்.

மற்றபடி, சம்பந்தனிடம் முதலில் கொடுக்கப்பட் வரைவு தீர்மானத்கை தமிழரசுக் கட்சியோ, ஏன் கூட்டமைப்போ ஏற்றுக் கொண்டிருக்க முடியாது என்பது, கூட்ட ஏற்பாட்டாளர்களுக்கு ஏன் தோன்றவில்லை என்று தெரியவில்லை. அவர்களைப் பொறுத்தவரை, இந்தியா சம்பந்தப்பட்ட பதின்மூன்றாம் திருத்தத்தைப் போர் முடிந்து பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு பின்னர் தூசி தட்டி எடுத்துள்ளார்கள். ஏன், இந்த நிதர்ச உண்மை அவர்கள் யாருக்கும் இத்தனை காலம் தோன்றவில்லை என்பது வியப்புக்குரியது.

ஆனால், கூட்டமைப்பைப் பொறுத்தவரை, போர் முடிந்த காலம் துவங்கி, பதின்மூன்றாவது திருத்தத்திற்கும் அப்பால் சென்று 13 என்ற வகையிலேயே அரசியல் தீர்மானம் தமிழர் தரப்பிற்கு பயனுள்ளதாக இருக்கும் என்ற முடிவில் நின்று வருகிறது. கூட்டமைப்பின் சார்பாக அரசின் புதிய யாப்பு தயார் செய்யும் குழுவில் அளித்த கோரிக்கையிலும் அங்கு சம்பந்தன் நேரடியாக அளித்த விளக்கங்களும் இதன் அடிப்படையிலேயே அமைந்தன.

அண்மையில் சுமந்திரன் தலைமையில் அமெரிக்கா சென்று வந்த தமிழ் நிபுணர் குழுவும் இத்தகைய நிலைப்பாட்டையே எடுத்ததாக எண்ண இடம் உள்ளது. நிபுணர் குழுவின் பிற உறுப்பினர்களான கனக ஈஸ்வரனும், நிர்மலா சந்திரஹாசனும் எந்த ஒரு கூட்டமைப்புப் பங்காளிக் கட்சியிலும் அங்கம் வகிக்கவில்லை என்றே தோன்றுகிறது. என்றாலும், அவர்களது எண்ணவோட்டங்களும், கூட்டமைப்பின் நிலைபாட்டைச் சார்ந்தே உள்ளன என்றும் எண்ண இடமிருக்கிறது.

எது எப்படியோ, வட- கிழக்கு தமிழர் தரப்புகளை பொறுத்தவரையில், இந்தப் பேச்சுகள் மூலம், போருக்கு பின்னரான கூட்டமைப்பு மீண்டும் பழைய உருவெடுத்துள்ளது என்பதே பெரிய சாதனை. அதோடு கூட, பழைய சோதனைகளும் திரும்புமா? என்பதற்கு, காலமும், குறிப்பாக சம்பந்தனின் உடல் நிலையும் மட்டுமே பதில் சொல்லும். ஆனால், அடிப்படைக் கொள்கை அளவில், வடக்கு - கிழக்கு இணைப்பு என்ற கூட்டமைப்பு முதலான கட்சிகளின் கொள்கை ரீதியான நிலைப்பாட்டிற்கு ரவூப் ஹக்கீம், ரிஷாத் உள்ளிட்ட தமிழ் பேசும் முஸ்லிம் அரசியல் தலைமைகளின் முடிவு என்ன? என்பது குறித்து அறிய வேண்டிய கட்டாயம் உள்ளது.

அது போன்றே, இந்தப் பேச்சுகளில் பங்குபெற்ற மலையகத் தமிழர் தலைமைகள் தங்கள் மக்களுக்கு என்ன பிரதிபலனை பெற்று தந்துள்ளார்கள்? அல்லது, வடக்கு-கிழக்கு தமிழர் தலைமைகள் தங்களுக்கு தற்போது அளிக்கும் இன ரீதியான அங்கீகாரமே பெரிய பயனா?

இதுவெல்லாம் இப்படி இருக்க, அரசியல் தீர்வு என்பது, தமிழர் தரப்பு இலங்கை சார்ந்த அரச பிரதிநிதிகளுடனோ, அல்லது நாடாளுமன்றத்தின் மூலமாகவோ மட்டுமே பெறக்கூடிய விடயம். அது போன்றே எப்போது, பதின்மூன்று போய் 13 என்ற பேச்சு வந்ததோ, அதன் பிறகு, இலங்கை அரசின் மீது, இந்தியா முன்பு போல் தார்மீக அழுத்தம் கொடுக்க இடமுள்ளதா? என்பதும் கேள்விக் குறியே. அத்தகைய சூழ்நிலையில், இந்தியா, அண்டை நாடு என்ற முறையில் நட்புறவுடன் வேண்டுகோள் மட்டுமே வைக்க முடியும்.

இதில், இன்னொரு விடயமும் இருக்கிறது. போருக்குப் பின்னர், அரசியல் தீர்வு குறித்து, சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பு, அன்றைய மஹிந்த ராஜபக்ஷ அரசுடன் 18 சுற்று பேச்சு நடத்தி, அதனைப் பாதியில் விட்டது. அந்த பேச்சுகள் முன்னோக்கிச் சென்ற காலத்திலேயே. சுமந்திரன் போன்றோர், திடீரென்று போர்க் குற்றங்கள் குறித்து சர்வதேச விசாரணை தேவை என்று புதிதாக தோன்றிய அமெரிக்க நிலைப்பாட்டை, தமிழ் சமூகத்திடம் முன் வைத்தனர். அதற்கு பின்னர் அதிகாரப் பகிர்வு என்பதை விட, ஐ.நா. மனித உரிமைகள் சபை தழுவிய போர் குற்ற விசாரணையிலேயே பல்வேறு தமிழர் தரப்புகளும் அதிக கவனம் செலுத்தி வந்துள்ளன.

இதே காலகட்டத்தில், அன்றைய மன்னார் கத்தோலிக்க கிறிஸ்தவ ஆயர் ராயப்பு ஜோசப் ஆண்டகை தலைமையிலான தமிழ் சிவில் சமூகமும், தங்களது உடன்பாடு இல்லாமல், அரசுடனான பேச்சுகளை முன்னெடுப்பதற்கு முட்டுக்கட்டை இட்டனர். இதுவெல்லாம், தமிழர் தரப்பிலேயே பலரும் மறந்து விட்டமை ஆச்சரியமான விடயம். அந்த வகையில், அண்மைக் காலத்தில், தமிழர் இனப் பிரச்சினை குறித்து, வட- கிழக்கில் உள்ள ஐந்து கத்தோலிக்க ஆயர்களும் கூடிப் பேசியமை, அரசுடனான எதிர்வரும் பேச்சுகளில், கிறிஸ்தவ சமூகத்தின் உள்ளார்ந்த கவலைகளுக்கும் புதிய தீர்வுகளில் பதில் இருக்க வேண்டும் என்பதையே நினைவூட்டுவதாகக் கருதியே செயல்பட வேண்டும்.

(கட்டுரையாளர் என். சத்தியமூர்த்தி மதிப்பு வாய்ந்த, சமகால இந்திய எழுத்தாளர், அரசியல் விமர்சகர், சிந்தனையாளர். பல்துறை சார்ந்த இந்திய பொதுக் கொள்கை சிந்தனையாளர் குழுமமான 'ஒப்சேவர் ரிசேர்ஜ் பவுண்டேஷன்' நிறுவனத்தின் சென்னைத் தலைமைப் பொறுப்பாளர்.)

## பாணின் விலை 100 ரூபா வரை அதிகரிக்கக்கூடும்

### எதிரணி எதிர்வுகூறல்

2022ஆம் ஆண்டு ஜனவரி யாகும்போது நாட்டில் ஒரு இறாத்தல் பாணின் விலை 100 ரூபா வரை அதிகரிக்கக்கூடும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் உப செயலாளர் அசோக அபேசிங்க எம்.பி. எதிர்வு கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு எதிர்வு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

நாட்டு மக்களுக்கு சுபீட்சத்தை ஏற்படுத்துவோம் எனக் கூறி ஆட்சிக்கு வந்தவர்கள், இன்று நாட்டு மக்களை நெருக்கடிக்குள் தள்ளியுள்ளனர். அரசின் முறையற்ற நிதி முகாமைத்துவத்தால் உலக நாடுகள் கடன் வழங்க மறுக்கின்றன.

இந்நிலையில், தற்போது எரிபொருட்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. குறுகிய காலப்பகுதிக்குள் இரண்டு தடவைகள் விலை அதிகரிப்பு இடம் பெற்றுள்ளது.

எரிபொருள் விலை அதிகரிப்பானது எல்லா விடயத்திலும் தாக்கம் செலுத்தும். அரசின் முறையற்ற நிதி முகாமைத்துவத்தால்தான் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. இன்னும் சில மாதங்களுக்குள் எரிபொருள் விலை மீண்டும் அதிகரிக்கப்படும்.

டொலர் நெருக்கடியைத் தீர்க்காவிட்டால் - ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி கண்டால் அனைத்துப் பொருள்களின் விலையும் உயரும். பாண் ஒன்றின் விலை 100 ரூபாவரை உயரும் - என்றார்.

## வெளிநாட்டு மாப்பிள்ளை, பெண் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிநாட்டு பிரஜா உரிமை பெற்றவர்களை ஓர் இலங்கை பிரஜை பதிவுத் திருமணம் செய்வது தொடர்பாகவே இந்த புதிய நடைமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 2022.01.01 முதல் வெளிநாட்டு பிரஜா உரிமை உடைய ஒருவர் இங்கு இலங்கைப் பிரஜை ஒருவரைத் திருமணம் செய்வதாயின் தாம் வதியும் நாட்டிலிருந்து தாம் குற்றச்சம்பவம் எதனுடனும் தொடர்புள்ளவர் அல்லர் என அந்நாட்டின பாதுகாப்புப் பிரிவிலிருந்து உரிய சான்றிதழ் (Security Clearance Report) பெற்று வந்து அதனை பத்தரமுல்லையிலிருக்கும் பதிவாளர்நாயகம் திணைக்களத்தில் சமர்ப்பித்து இலங்கை பதிவாளர் நாயகத்தின் முன் அனுமதி பெறவேண்டும்.

இதேபோன்று சுகாதார நிலை பற்றிய ஓர் சுய பிரதிக்ஞனையும் (Health Declaration) சமர்ப்பிக்க வேண் டும்.

அவ்வாறு சமர்ப்பித்தாலும் சாதாரண விவாக பதிவாளர்கள் (கிராம பதிவாளர்கள்) மூலம் பதிவு செய்ய முடியாது. பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் மேலதிக மாவட்டப் பதிவாளர் மூலமே பதிவு செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளதோடு இரட்டைப் பிரஜா உரிமை கொண்டவர்களிற்கு இந்த விதிமுறை பொருத்தாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## வாக்குறுதியை நிறைவேற்றா ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்று ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசு வாக்குறுதி அளித்த முறைமைக்கு அமைவாக எதிர்வரும் ஜனவரி மாதம் 20ஆம் திகதி அதிபர் - ஆசிரியர்களுக்கு நிலுவைக் கொடுப்பனவை சம்பளத்துடன் இணைக்காவிட்டால் பாரிய தொழிற்சங்கப் போராட்டம் முன்னெடுக்கப்படும்.

அதிபர் - ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அரசு அடுத்த வருடத்துக்கான வரவு - செலவுத் திட்டத்தில் 3 கோடி ரூபாவை ஒதுக்கியது.

எனினும், அதற்கான சுற்றுநிருபம் இதுவரை வெளியிடப்படவில்லை. இவ்விடயத்தில் எமக்குப் பாரிய சந்தேகம் உள்ளது.

இது தொடர்பில், கல்வி அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட பொறுப்புவாய்ந்த அதிகாரிகளிடம் தொடர்ச்சியாகக் கலந்துரையாடி வந்தாலும் இதுவரை ஒரு தீர்க்கமான பதில் வழங்கப்படவில்லை.

அமைச்சரவை உபகுழுவால் அனுமதிக்கப்பட்டு அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிலுவைக் கொடுப்பனவையே நாம் கோருகின்றோம்.

நாடளாவிய ரீதியில் 30 ஆயிரம் ஆசிரியர்களுக்குத் தட்டுப்பாடு காணப்படுகின்றது. மத்திய மாகாணத்தில் மட்டும் 2 ஆயிரத்து 800 ஆசிரியர்களுக்குத் தட்டுப்பாடு காணப்படுகின்றது - என்றார்.

## வெள்ளி தோறும் இனிமேல் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆங்கில ஊடகங்கள் அவரது திறனாய்வுக் கட்டுரைகளைத் தேடித் தவறாது பிரசுரித்து வருகின்றன. இலங்கை அரசியல் விவகாரங்களில் அதிக பரிச்சயமுள்ள அவர், இலங்கையின் அனைத்து தமிழ், சிங்கள அரசியல் தலைவர்களுடனும் போராளிகள் குழுக்களின் தலைவர்களுடனும் நெருக்கமாக ஊடாட்டத்தை பேணி வருபவர். 2005 - 2006 ஆம் ஆண்டில் இலங்கையின் முக்கிய ஊட கம் ஒன்று அவரை ஆலோசகர் பதவியில் அமர்த்தி அவரது திறமையைப் பயன்படுத்திக் கொண்டது.

இந்தியாவின் கொள்கை வகுப்பு சிந்தனையாளர்கள் மத்தியில் பெரிதும் மதிக்கப்படும் என். சத்தியமூர்த்தி இனிமேல் வாரம் தோறும் வெள்ளிக்கிழமைகளில் 'காலைக்கதிர்' வாசகர்களுடனும் தவறாது ஊடாடுவார்.

(ஆ - ர்)

## யாழில் மற்றுமொரு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காகச் சென்ற ஆனைக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கே மலேரியா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த 15ஆம் திகதியும் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒருவருக்கு மலேரியாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

குறித்த நபர் மல்லாகம் பகுதியைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

கடந்த 10 நாட்களில் இருவர் மலேரியா தொற்றாளர்களாக யாழ்ப்பாணத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்கள் இருவரும் தென்னாபிரிக்காவிலிருந்து அண்மையில் நாடு திரும்பியிருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## அச்சுவேலி பொலிஸ் நிலையத்துக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விஜயம் மேற்கொண்டார்.

அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் இடம்பெறும் முறைகேடுகள் தொடர்பில் அச்சுவேலிப் பகுதி மக்களால் யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் உயர் அதிகாரிகள் மட்டத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டன.

இதையடுத்து யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்துக்கு நேற்று திடீர் விஜயம் மேற்கொண்டார்.

குறித்த விஜயத்தின்போது அங்கே பல்வேறு விடயங்கள் தொடர்பில் அவர் ஆராய்ந்தார்.

## கிளிநொச்சியில் வெடித்தது .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றுள்ளமை தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

ஜெயந்தி நகர் பகுதியில் நேற்றுக் காலை உணவு தயாரித்துக்கொண்டிருந்த பெண்ணொருவர் அடுப்பு வெடித்துள்ளது என முறைப்பாடு தெரிவித்ததை அடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்த வெடிப்புச் சம்பவத்தில் எதுவித பாதிப்புக்களும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# 2021 இறுதிக்குள் உத்தியோகபூர்வ கையிருப்பு 300 கோடி அமெ. டொலருக்கு மேல் இருக்கும்

## மத்திய வங்கி அறிவிப்பு

2021 ஆம் ஆண்டின் இறுதிக்குள் உத்தியோகபூர்வ கையிருப்பு 300 கோடி அமெரிக்க டொலர்களுக்கு மேல் இருக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் -

தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் வழிமுறைகள் 2021 இறுதியளவில் அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 300 கோடிக்கு மேலாகக் காணப்படுவதை உறுதிப்படுத்தும் என்பதை இலங்கை மத்திய வங்கி பொது மக்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றது.

கொவிட் - 19 நோய்த்தொற்றின் பொருளாதாரத் தாக்கத்தால் ஏற்பட்ட சிக்கல்களுக்கும் வெளிநாட்டுத் துறையின் பாதகமான அபிவிருத்திகளால் ஏற்படுத்தப்பட்ட சவால்களுக்கும் மத்தியில் இலங்கைப் பொருளாதாரம் 2021 ஆண்டு முழுவதும் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையைக் காண்பித்தது.

நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் கொடுப்பனவு உள்ளடங்கலாக வெளிநாட்டுக் கடன்களை மீள்செலுத்துவதன் ஊடாக இலங்கை அதன் படுகடன் கடப்பாடுகளையும் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளது.

தற்போதுள்ள வெளிநாட்டுப் படுகடன் நீடித்துநிலைத்திருக்கும் முறையொன்றில் முகாமைத்துவம் செய்வதற்கு ஆண்டின் ஆரம்பத்திலிருந்து படுகடனல்லாத பாய்ச்சல்களை ஊக்குவிப்பது தொடர்பில் வலியுறுத்துவதுடன் அலுவல்சார் ஒதுக்குகளை குறைநிரப்புவதற்கான சாத்தியமான வழிமுறைகளை வினைத்திறனாகக் கண்டறிவதில் மத்திய வங்கியும் அரசாங்கமும தீவிரமாக ஈடுபட்டு வந்துள்ளன.

குறுங்காலத்தில் அலுவல்சார் ஒதுக்குகளை கட்டியெழுப்புவதற்கு எதிர்பார்க்கப்படும் இலக்குகளை நிர்ணயிக்கின்ற பேரண்டப்பொருளாதார மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடடை நிச்சயப்படுத்துவதற்கான ஆறு மாதகால வழிகாட்டலின் அறிவிப்புடன் 2021 ஒக்ரோபர் தொடக்கம் இம்முயற்சிகள் துரிதப்படுத்தப்பட்டிருந்தன.

ஆறு மாதகால வழிகாட்டலில் குறிப்பிடப்பட்டவாறு அண்மைய குறுங்காலத்தில் அநேகமான வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. மத்திய கிழக்கு மற்றும் ஏனைய பிராந்திய மத்திய வங்கிகளுடனான பரஸ்பர பரிமாற்றல் வசதிகள் உள்ளடங்கலாக மத்திய வங்கிக்கான முக்கிய வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள் ஏறத்தாழ 200 கோடி அமெரிக்க டொலர் பெறுமதியாகக் காணப்படுகின்றன.

அரசாங்கத்திலிருந்து அரசாங்கத்துக்கான நிதியிடல், கூட்டுக்கடன்கள் அதேபோன்று பல்புடை அமைப்புக்களிலிருந்தான கடன்களைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாடுகளையும் அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. இதற்குப் புறம்பாக, அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட உயர்மட்ட வெளிநாட்டு விஜயங்களின் போது பேச்சுக்குட்பட்ட எதிர்பார்க்கப்படும் வெளிநாட்டுச் செலாவணி வசதிகளும் சிறப்பாக முன்னேற்றங்கண்டு வருகின்றன.

மேலும், தொழிலாளர் பணவனுப்பல்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட ஊக்குவிப்புத் திட்டம் மற்றும் ஏற்றுமதிப் பெறுகைகள் தொடர்பிலான மீளனுப்பல் மற்றும் மாற்றல் தேவைப்பாடுகள் போன்ற வெளிநாட்டுச் செலாவணியின் பன்முகக் கூறுகள் மீது மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்ட தலையீடுகள் உள்நாட்டுச் சந்தையில் திரவத்தன்மையை மேம்படுத்துவதன் மூலம் அலுவல்சார் ஒதுக்குகளை மேலும் கட்டியெழுப்புவதற்கு மத்திய வங்கியை இயலச்செய்கின்றன.

வெளிநாட்டுத் தொழில்வாய்ப்புக்களுக்கான புறப்படுகைகளில் அண்மைய அதிகரிப்பு மற்றும் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளில் அவதானிக்கப்பட்ட துரித வளர்ச்சி என்பவற்றுடன் வெளிநாட்டுத் துறை எதிர்வரும் காலப்பகுதியில் சிறப்பான முறையில் மீட்சியடையுமென எதிர்பார்க்கப்படுவதுடன் தற்போது அவதானிக்கப்பட்டுள்ள அழுத்தங்கள் பொருளாதாரத்துக்கான அதிகரித்த உட்பாய்ச்சல்களுடன் மிதமடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இத்தகைய எதிர்பார்க்கப்பட்ட உட்பாய்ச்சல்கள் பொருண்மியமாவதுடன் ஒதுக்கு நிலைமை 2022 ஆம் ஆண்டு முழுவதிலும் போதியளவு மட்டங்களில் காணப்படுமென அரசாங்கமும் மத்திய வங்கியும் தொடர்ந்தும் நம்பிக்கை கொண்டுள்ளன என்று குறிப்பிட்டுள்ளது.

# சமூக வலைத்தளம் ஊடான நிதி மோசடி விவகாரம்; பிரதான சந்தேக நபர் உள்ளிட்ட 7 பேருக்கு மறியல்

கொழும்பு - கொம்பனித்தெருவிலுள்ள நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்து, சமூக வலைத்தளங்கள் ஊடாக பல்வேறு மோசடிகளில் ஈடுபட்டனர் எனக் கூறி போதைப்பொருள்களுடன் கைது செய்யப்பட்ட 7 பேரையும் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

எதிர்வரும் 2022 ஜனவரி 4 ஆம் திகதிவரை அவர்களை விளக்கமறியலில் வைக்க கொழும்பு மேலதிக நீதிவான் சந்திம லியனகே உத்தரவிட்டுள்ளார். வலான மோசடி தடுப்புப் பிரிவு நீதிமன்ற உத்தரவுடன் முன்னெடுத்த விசேட சுற்றிவளைப்பின் போது இவர்கள் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டமையுடன், கறுப்பு பண சுத்திகரிப்பு சட்டத்தின் கீழ் சி.ஐ.டி. எனும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் சிறப்புக் குழுவொன்று மேலதிக விசாரணைகளை ஆரம்பித்தது.

இந்நிலையிலேயே சந்தேக நபர்கள் சி.ஐ.டி. அதிகாரிகள் ஊடாக நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட போது நீதிமன்றம் அவர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது.

வலான மோசடி தடுப்புப் பிரிவின் சிறப்புக் குழு கோட்டை நீதிமன்றில் பெற்றுக்கொண்ட சிறப்பு உத்தரவுக்கு அமைய, கொம்பனித் தெரு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஜைக் ஹில்டன் ஹோட்டலில் நடந்த களியாட்டம் ஒன்றில் சோதனை நடத்தியிருந்தது.

வலான மோசடி தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர்களான சிறிவர்தன, சம்பத், உப பொலிஸ் பரிசோதகர்களான சதருவான், பண்டாரநாயக்க, சார்ஜன்களான ஜெயலால், கமல்சிறி மற்றும் பெண் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் அடங்கிய குழுவினர் இந்தச் சுற்றிவளைப்பு சோதனையை நடத்தியிருந்தனர்.

இதன்போதே குறித்த நட்சத்திர ஹோட்டலில் இரு தொடர்மாடி குடியிருப்புக்களை வாடகைக்குப் பெற்று, அங்கு தங்கியிருந்தவாறு பல்வேறு மோசடி நடவடிக்கைகளில் சமூக வலைத்தளம் ஊடாக ஈடுபட்டு பணம் பறித்தமைக்காக, பொலிஸார் 7 பேரைக் கைது செய்தமை குறிப்பிடத்தக்கது.

# சட்டவிரோத சொத்துக் குவிப்பு குறித்து அறிவிக்க விசேட தொலைபேசி இலக்கம்

எந்தவொரு சட்டவிரோத செயற்பாடுகள் அல்லது சட்ட விரோதமான சொத்துக் குவிப்பு தொடர்பான தகவல்களை வழங்குவதற்கு பொதுமக்கள் 1917 என்ற இலக்கத்துக்கு குறுஞ்செய்தி அனுப்ப முடியும் என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

முறைப்பாடுகளை ஏற்க 1917 என்ற எண் 24 மணிநேரமும் சேவையில் இருக்கும் என்றும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பல வழிகளில் சட்டவிரோதமான செயல்களில் ஈடுபட்டு பல்வேறு நபர்கள் சொத்துக்களை குவித்துள்ளமையை அவதானித்தமையை அடுத்து இது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதுபோன்ற தகவல்களை விசாரிப்பதற்காக சட்டவிரோத சொத்துக்கள் மற்றும் சொத்து விசாரணைப் பிரிவும் அண்மையில் நிறுவப்பட்டது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் தலைமையில் இந்தப் பிரிவு உள்ளது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.12.2021 இல் வெளியிடப்பெற்றது.